உ

பரதேவி துணை

# ஸ்ரீ லலிதாம்பாள் சோபனம்


[ சக்கரங்களுடன் ]

பிரசுரித்தவர் :
தென்காசி
K. N. சுப்பிரமணிய பிள்ளை
அவர்கள் குமாரர்
K. N. S நடராஜ பிள்ளை

கிடைக்குமிடம்:-
கலைமகள் கம்பெனி
174. ஹைரோடு
திருநெல்வேலி ஜங்

விலை.
63
காசு

*Copyright Registered 1963*



1900 முதற்பதிப்பு
1927 இரண்டாவது பதிப்பு
1956 மூன்றும் பதிப்பு
1959 நான்காம் பதிப்பு
1963 ஐந்தாம் பதிப்பு

காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது.

கலைமகள் பிரஸ், வடக்கன்குளம்.

# Notice of Registration

It is hereby informed that **'Lalithambal Sobanam'** was translated from Sanskrit by Appasamy Iyer and the same was not printed and published. The right for publishing this book is purchased by me from Sornalakshimi Ammani Ammal w/o Appasamy Iyer, Chalai, Trivandrum. It is registered under Act 25 of 1867 para 6 of Sub Section 20 Copy right reserved in French possession also.

Unauthorised printing, publishing and translation of this book is prohibited and the offenders will be liable for the damages to the publishers.

**K. N. S NATARAJA PILLAI,**
S/o K. N. Subramania Pillai
Book Seller, Tenkasi.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு

இதனால் சகலமானவர்கட்கும் அச்சுக்கூடத் தலைவர் அவர்கட்கும் தெரிவிப்பது யாதெனில் — இந்த லலிதாம்பாள் சோபனம் நூலானது இதுவரையிலும் சீர்வான பாஷையிலிருந்ததை தமிழ்மொழி பெயர்த்து அச்சிடாதிருந்தபடியால் திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோயில் பக்கம் வடபகுதி தெருவில் குடியிருக்கும் அனந்தசுப்பையயர் குமாரர் அப்பாசாமி ஐயர் என்பவரால் தமிழ் மொழி பெயர்த்த லலிதாம்பாள் சோபனம் என்னும் இந்நூலை ஷை ஊர் ஷை தெருவில் இருக்கும் அப்பாசாமி அய்யர் பாரியாள் சொர்ணலக்ஷ்மி அம்மணி அம்மாள் அவர்களால் காப்பிரைட் சுதந்திரத்தை எனக்கு விற்கிரயம் செய்துவிட்டபடியால் இதை 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டு 20-வது பிரிவு, 6-வது விதியின் பிரகாரம் இந்நூலை பிரன்ஞ்சு இலாகாவாகிய புதுச்சேரியிலும் காரைக்காலிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்நூலுக்கு உடையவராகிய சொர்ணலக்ஷமி அம்மாள் அவர்களிடம் கீழ்க்கண்ட நாங்கள் காப்பிரைட் ரிஜிஸ்தரை சகல சுதந்திரத்துடன் கிரையம் பெற்றுக்கொண்டு நாங்கள் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறோம். இதை எமது உத்தரவின்றி பிறர் பதிப்பித்தாலும் இதை வேறு பாஷையில் மொழிபெயர்த்தாலும் அல்லது இதில் கண்டிருக்கிற பாகங்களை அச்சிடுதலும் கூடாது. அப்படி அச்சிட்டால் அதனால் உண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்

இதன் விலை 63 நயே பைசா.

இப்படிக்கு
K. N. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள்
குமாரர் K. N. S. நடராஜபிள்ளை,
புத்தக வியாபாரம், தென்காசி.

உ
பரதேவி துணை
லலிதாம்பி காயேநம:

# ஸ்ரீ லலிதாம்பாள் சோபனம்

'சீர்மேவுந் தில்லை' என்ற கும்மி ராகத்திலும் பாடலாம்)

மங்களமான லலி தாம்பாள் சோபனம்
மங்கள முண்டாகப் பாடுகிறோம்
ஸ்ரீங்கார கணபதி ஷண்முகர் ஸரஸ்வதி
எங்கட்கு முன்வந்து காப்பாமே
முப்பத்து முக்கோடி தேவர்களும் இந்திரனும்
மும்மூர்த்திகளும் வேதப்பிராமணனும்
நாற்பத்து முக்கோண நாயகியாளம்மன்
நாதர் காமேசருங் காப்பாமே: 1

## காஞ்சி நகரத்தில் காமகோடி பீடத்தில் எழுந்தருளியிருக்கும் காமாக்ஷியம்மையை நோக்கி அகஸ்திய மகரிஷி தபசிருத்தல்

ஆதி பிரம்மரிஷி அகஸ்தியரும்
அகிலலோகம் சஞ்சரிப்பவரும்
ஜோதி காமாக்ஷியை காஞ்சி நகரத்தில்
ஸ்துதித்து பூஜைசெய்து தபஸிருந்தார்
சங்கு சக்கரம் வலக்கை புஸ்தகமும்
தரித்தேஹயக்ரீவர் மஹா விஷ்ணுவாய்
தங்கவர்ணி லோபா முத்திரை மணவாளன்
தபஸிற்கு முன்வந்தார்—சோபனம் சோபனம். 2

எட்டிரண்டுபசார பூஜைகள் முதலாக
எல்லாவற்றையும் பக்தியுடனேசெய்து
ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்துமந்த
அகஸ்தியர் வேதத்தால் ஸ்துதித்து நின்றார்
கும்பமுனியுட தபஸாலே மனம்
குளிர்த்தயக்ரீவரும் தானுரைப்பார்
இன்பமாகச்செய்தாய் பூஜையகஸ்தியர்
என்ன வேண்டுமென்றார்-சோபனம் சோபனம். 3

துரகவதனருட அம்ருதவசனங்கேட்டு
சொல்லுவர் மித்திர வருணபுத்ரர்
அபயவரதகரர் அருமையாய் நான் கேட்கும்
வரந்தரவேணுந் தயவுசெய்து

கலியுகந்தனிலிந்தப் பாமர ஜனங்கட்கு
கைவல்யஞானம் எப்படி யுண்டாகும்
எளிதாகவே ஒரு உபாயஞ் சொல்லுமென்று
இரந்துகேட்கலுற்ருர்—சோபனம் சோபனம். 4

ஆதரவுடன் ஜனங்களுக்குபகாரமாய்
அகஸ்தியர்க் கயக்ரீவர் எடுத்துரைப்பார்
ஏ தகஸ்தியரே இந்தப் பிரச்னந்தான் சியவனருக்
கென்ருலே முன்னஞ் சொல்லப்பட்டது
ஆனாலும் நீர் கேட்டது சொல்லுவோமிப்போ
அன்புடன் கேளும் ஏகமனதாய்
இன்றுமுதல் உமக்காகு முபதேசத்தால்
எல்லோரும் கேட்கட்டும்-சோபனம் சோபனம். 5

ஆதிபராசக்தி யனுக்கிரகத்தால்
ஆத்மத்தியானம்வரும் மானிடர்க்கு
மாதவர் மாய்கை யில்லாதேவிட்டா லிந்த
மானிடர்களுக்கு ஜயக்கமில்லை
ஹயக்ரீவர் சொற்கேட்டு அகஸ்தியர்பின்னும்
ஆதி பராசக்தி ரூபங்களை
தயவுசெய்து எனக்குச் சொல்லவேண்டுமென்று
தண்டனிட்டுக் கேட்டார்-சோபனம் சோபனம். 6

அந்த ஹயக்ரீவர் தம்முடைய மனதில்
அம்பிகை பாதத்தை நமஸ்கரித்து
அகஸ்தியர் கேட்பதெல்லாஞ் சொல் வோமென்று
எழுந்தருளினர் அச்வமுகர்
அகஸ்தியருமந்த ஹயக்ரீவரைத்தன்
ஆசிரமத்தில் கூட்டிக்கொண்டுவந்து
பகவானை ஆசனந் தன்னில் வைத்துப்பின்
பணிந்து கேட்கலுற்ருர்—சோபனம் சோபனம். 7

பகவானே! தர்ம சாஸ்திரங்களெல்லாம்
பிறந்தது உம்மிடத்திலிருந்து
மகாதேவியுடைய அவதாரங்களை
மாதவா விஸ்தரித்துச் சொல்லவேணும்
அன்புடன் கேட்ட அகஸ்தியரைவாழ்த்தி
ஹயக்ரீவமூர்த்தியும் எடுத்துரைப்பார்
அம்பிகையுடைய அவதாரங்கள் சொல்ல
ஆரம்பித்தாரப்போ—சோபனம் சோபனம் 8

## மகா விஷ்ணுவின் அம்சாவதாரமாகிய ஹயக்ரீவர் அகஸ்திய மகரிஷிக்கு தேவி மஹாத்மியத்தைச் சொல்ல ஆரம்பித்தல்

ஆதியந்தம் பராசக்திக்கில்லை
    ஆதாரமுஞ்ஜகத்துக்கிவள்தான்
ஜோதிருபியுடைய ரூபங்களை யெல்லாம்
    சொல்லமுடியா தொருவராலே
ஆனாலும் தெரிந்தமட்டுக்கு மிப்போ
    அவளுடசில அவதாரஞ் சொல்வோம்
முன்னே பிரம்மாவின் த்யானத்தில் ரக்ஷிக்க
    முதல் வந்தாள்—சோபனம் சோபனம். 9

முன்னாள் தேவேந்திரன் வெள்ளையானை ஏறி
    மூன்றுலோகம் சுற்றி வரும்போது
தன் நினைவில்லாமல் மதத்தினால் உமையவள்
    சங்கரையும் வணங்காமல் வந்தான்
இந்திரன் மதத்தை யடக்கவேண்டுமென்று
    ஏவினார் ஈசரும் துர்வாஸரை:
வந்து துர்வாஸரும இந்திரன் கையிலொரு
    மாலையைக் கொடுத்தார்—சோபனம் சோபனம் 10

வாங்கி மாலையை இந்திரன் யானையினுடைய
    மண்டையில் வைத்தான் மதத்தினாலே
ஓங்கித் துதிக்கையால் எடுத்தந்த மாலையை
    உதறிப்பூமியில் காலால் மிதித்தது
துர்வாஸமுனி கண்டு அதிகோபத்துடனே
    துர்ப்புத்தி இந்திரனைச் சாபமிட்டார்
(உன்) கர்வமல்லோ இந்திரா இதுசெய்யச் சொல்லிற்று
    கர்வேச்வரிபோமென்றார்-சோபனம் சோபனம், 11

சபித்துவிட்டு முனி போகிய பின்பு
    சக்ரேசன் அமராபுரியில் வந்து
அபசகுணங்களைக் கண்டு பயந்து
    ஆசாரியர் பிரஹஸ்பதியை வருத்தி
ஆசனத்தில் வைத்து நமஸ்கரித்து
    அவரைப் பார்த்திந்திரன் ஏதுரைப்பான்
தேசத்தில் துர்நிமித்தம் காணுகின்றதே
    தேவரீர் வழிசொல்லும் சோபனம் சோபனம் 12
தேவகுருவுங் கேட்டுச் சொல்வார் இந்திரனோடு
    செய்த கர்மம் அநுபவித்தேதீரும்

பாபகர்மம் அனுபவித்தாற்ருன் தீரும்
பிராயச்சித்தத்தினுல் போனதில்லை
நிவர்த்தியினுலே ஒருநாளும் போகாது
லக்ஷங்கோடி ஜன்மம் ஆனுலும்
ஒன்றுகேள் பாபத்துக்கு நிவர்த்தி வாஸவனே
உண்மைநான் சொல்லுவேன்-சோபனம் சோபனம் 13

ஹத்தி திருட்டு ஹிம்ஸை பானம் பரதாரம்
அஞ்சும் பஞ்ச மகாபாதகமாம்
அறியாத் தனத்தாலே ஐந்து பாபமும் செய்தால்
அந்தந்தச் சாதிபோல நிவர்த்தியுண்டாம்
பிரஹ்மஹத்திக்கொரு சாஸ்திரத்திலுமில்லை சொல்லுவேன்
பிராயச்சித்தம் ஒருநாளுமிந்திரா
திருட்டென்ற பாபத்திற்கோர் உபகதை
தேவேந்திரா கேள்—சோபனம் சோபனம் 14

களவுத்தொழிலெங்கும் செய்து கொண்டுவரும்
கள்ளனொருத்தன் காஞ்சிப்பட்டணத்தில்
களவாண்ட பணங்களை கனமாய்ச் சேர்த்து நடுக்
காட்டிற்கொணர்ந்து புதைத்து வைத்தான்
கள்ளனுக்குள் கள்ளன் வேடனொருத்தன் அதைக்
கண்டுவனம்போனுன் பின்னுலே
மெள்ளவந்தந்தப் பணங்களையெல்லாம்
முற்றிலும் எடுத்தான்—சோபனம் சோபனம் 15

கொண்டுவந்தப் பணங்களையெல்லாம்
கொண்டபெண்டாட்டி கையிற்கொடுத்தான்
பெண்டாட்டி வாங்கியுள்ளே வைத்துக்கொண்டு
புருஷனைப் பார்த்தொரு வாக்குரைப்பாள்
*வால்மீகர் சாபத்தால் வேடர்க்குத்தனங்கள் விருத்
திக்க மாட்டாது அதனுலே
நன்மையாய் நான் சொன்ன தர்மஞ் செய்தால்வெகு
நாளிருக்கும் தனம்—சோபனம் சோபனம் 16

* ஒரு பிராமணன் தன் நெறி தவறி கிராதகத் தொழில் செய்தபடியால் மறுஜன்மம் வேடனுய்ப் பிறந்தான். அவன் காட்டில்போவார்வருவாரை எல்லாம் வழிமறித்துக் கொள்ளையடித்து ஜீவனம் செய்து கொண்டிருந்தான், ஒரு காலத்தில் ஸப்தரிஷிகள் அந்த வழிபோக அவன் அவர்கள் பொருளை அபகரிக்க அவர்களை வழிமறிக்கும்போது அந்தரிஷிகள் அவனைப் பார்த்து "அப்பா, இப்பேர்ப்பட்ட கொடுந் தொழிலைவிட்டு நல்ல மார்க்கத்தில் நட" வென்று சொன்னுர்கள். அதற்கு வேடன் 'சுவாமிகாள்' என் குடும்பங்களை நான் காப்பாற்ற வேண்டியிருப்பதால் வேறு

தொழில் அகப்படாமல் இதைத்தான் செய்து குடும்பத்தைக் காப் பாற்றுகிறேன், என்று சொன்னான் இதைக்கேட்ட ரிஷிகள் 'இந்தப் பாபத்தொழிலால் வரும் சம்பாத்யத்தை உன் குடும்பத்தார் அனு பவிக்கிறார்களே, இதனால் வரும் பாபத்தையும் 'அவர்கள் பாகம் போட்டு அனுபவிக்கிறார்களா,' என்று அவர்களைக் கேட்டுவரும்படி சொன்னார்கள் அவன் வீடு சென்று பெண்டாட்டி பிள்ளைகளை ரிஷிகள் சொன்னபடி கேட்க அவர்கள் 'இது எங்கேயாவது உண்டா' சம்பாதித்துப் போடுவதுதான் உன் கடமை, பாபத்தை பங்கிட்டுக் கொள்வது எங்கள் கடமையல்ல என்று சொல்லிவிட்டார் கள். இதைக் கேட்டவுடன் வருத்தங் கொண்டு 'உங்கள் குலத் திற்கே ஐசுவரியஞ் சேராமல் போகக்கடவதென்று சபித்துவிட்டு ரிஷிகளிடம் ஓடி வந்து 'சுவாமிகாள்! எனக்கு நல்ல வழி சொல்லி விட்டுப் போகவேண்டுமென்று கெஞ்சினான் மகரிஷிகள் இரங்கி தாரக மந்திரமாகிய ஸ்ரீ ராமநாமத்தை உபதேசித்தார்கள், நாமம் நாவில் நுழையவில்லை, அப்போது அங்கிருந்த மராமரத்தைக் காட்டி இதன் பெயரை விடாமல் சொல்லிக் கொண்டிருந்தாயானால் முக்தனாவாய் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். அந்த நாமப்ர பாவத்தினாலே அவன் மகரிஷியாகிய வால்மீகியானார் என்று புராணம்.

காரியமாமிந்த வார்த்தைகேட்டு வேடன்
கிராமம் தடாகந் தோப்பாலயங்கள்
பாரியாகச் செய்து பிராமணாளுக்கெல்லாம்
பக்தியுடன் தானஞ் செய்திருந்தான்
வேடன் வேடத்திக்கு காலங்கள் சென்றபின்
விஷ்ணுபிரம்மாசிவ யமதூதர்கள்
கூடிவந்தவர்களை அவரவர் லோகத்திற்குக்
கூட்டிப்போகவந்தார்—சோபனம் சோபனம் 17

நாரதர்வந்திந்த தூதர்களுக்குச் சொல்வார்;
நாலுமூன்றுண்டிவர்க்குக் காற்றுரூபம்
திருடின பணத்துடையவர்க்குத் தர்மமென்று
திருப்பினார் நாரதர் தூதர்களை
பணத்திற்குடையவர்க்குத் தெய்வகிருபையாலே
பாபம் போய் புண்ணியம் சித்தித்து
பணத்திற்குடையவர் நல்லகதியடைந்தார்
பார்த்துக்கொள் இந்திரா—சோபனம் சோபனம் 18

ஜனங்களை ரக்ஷிக்கும் ராஜன் மாத்திரந்தான்
செய்யலாகுந்துஷ்ட நிக்ரகங்கள்

மனிதர்கள் பசுயக்ஞந் தவறுதலாய்ச் செய்தால்
மாதேவி கோபித்து எரித்திடுவாள்
யுவனாச்வமகாராஜன் யக்ஞத்தல் தேவர்கள்
ஒருவருக்கொருவர் முந்திச ண்டையிட்டார்
தேவர்க்கு பாகத்தை பிரித்துக் கொடுத்தார்
தயவாக பிரம்மாவும்—சோபனம் சோபனம் 19

ஸுராபானம் செய்த பேர்க்கு நரகமுண்டு
சொட்டுக் கொருவருஷக் கணக்காக
பரதாரகமனத்தால் ஆயுஸுகுறைந்திடும்
பாபரோகம் நரகங்கள் உண்டு
பரதாரகமனத்தால் ராவணன் மாண்டான்
பாஞ்சாலியால் துரியோதனன் மாண்டான்
ஒருக்காலும் பரதார நினைவிலாதவர்க்கு
ஒரு நாளும் அமடில்லை—சோபனம் சோபனம் 20

பானம் பரதாரம் முன் சொன்ன மூன்றுடன்
பஞ்சமகாபாதகங்கள் ஐந்து
ஏனிதுகளை எல்லாம் உனைக்குச்சொன்னேன் என்றால்
இந்தப் பாபங்களெல்லாம் உனக்குமுண்டு
தீராதபாபங்கள் தீர்ந்தேவியுடைய
ஸ்ரீ பஞ்சதசாக்ஷரி ஜபத்தாலே
தீராத பாபத்தைச் செய்யாதே இந்திரா
சொல்லுவேன் உனக்கிப்போ—சோபனம் சோபனம் 21

முன்னாலே தேவரும் நீயும் தாதா புத்திரன்
விசுவரூபனைப் புரோகிதராய்ச்
சொன்னபடிக்கு இருந்தான் உங்களுக்கு
துரோகமுஞ் செய்யவில்லை விச்வரூபன்
அனியாயமாயவனை நீ வதைத்தாய்
அஸுரர் மருமான் என்ற விரோதத்தால்
விச்வரூபனுடைய வதத்தால் பிரம்மஹத்தி
விரட்டித்துன்னை இந்திரா—சோபனம் சோபனம். 22

விஷ்ணு அறிந்தந்த பிரம்மஹத்தியை
இஷ்டமாய் உன்மீதிரக்கத்துடன்
பக்ஷமாய் நாலுபங்காக்கி பிரம்மஹத்தியை
பூமி பெண்கள் மரங்கள் நதிகளுக்கும்
ஏற்றுக்கொள்ளச் சொல்லிக்கொடுத்து அவர்களால்
கேட்டவரங்கள் கொடுத்தனுப்பிவைத்தார்
விச்வரூபன் தகப்பன் அக்கினியில் வந்த
விருத்திரனைக் கொன்று (பிரம்ம) ஹத்திபட்டாய் 23

அதுவும் போதாதபடிக்கு துர்வாஸரும்
இந்திரா உன்னை வேணது சபித்தார்—
இது எல்லாம் ஒருமிக்கப்பலனனுபவிப்பாய்
இக்ஷணம் நிமித்தங்கண்டு சொல்லுகிறேன்
சோபையில்லையார் உன்னுலகத்தில் இந்திரா !
சோறில்லாதவர்கள் போல் ஆனார் தேவாள்
கோபிகள் ஆனார்கள் உலகத்து விப்ரார்கள்
ரொம்ப உற்பாதங்கண்டேன்—சோபனம் சோபனம். 24

இப்படி இந்திரனுக்கு குருவுங் கதைகளை
எல்லாஞ் சொல்லிக்கொண்டிருக்கும்போது
மப்புத்தட்டிக்கொண்டு அஸுராளுடனே
மலகனென்ற அஸுரராஜனும்
அமராபதியை வளைந்து தேவர்களை
அடித்து வெளியிலே துரத்திவிட்டான்
அமராளும் இந்திரனும் பிரம்மாவிடத்தில் போய்
அஸுரன்சேதியைச் சொன்னார்—சோபனம் சோபனம் 25

சதுர்முகர் கெட்டிநந்த அஸுரர் சேதியெல்லாம்
தட்டுக்கெட்ட இந்திரனைப் பார்த்துரைப்பார்
இதற்கொன்றும் நம்மாலே ஆகாது இந்திரா
என்னாலேயாகும் உபாயஞ் சொல்வேன்
அச்சுதரே ஐயம் தருவாருங்களுக்கு
அவரிடம்போங்கள் என்றுருடனே
சச்சிதானந்தர் சமீபத்தில் அத்தனை
பேர்களும்வந்தார்கள்—சோபனம் சோபனம். 26

சேஷசயனருட சரணம்புஜங்களை
தண்டனிட்டு ஸ்தோத்திரங்கள் செய்து
காசாம்பூவர்ணரோடு தாங்கள் படுகின்ற
கஷ்டங்களைச்சொல்லி முறையிட்டார்கள்
நாதரே உம்முட தாஸர்களேயான
நாங்கள்படுகின்ற சங்கடங்கள்
மதறியாமலிருக்கின்ற காரியம்
இந்த நித்திரையுண்டோ—சோபனம் சோபனம். 27

மலகன் முதலான அஸுரரை வதைத்து
மாதவா இந்திரனை நிலையிலாக்கும்!
அலைகிறோமே நாங்கள் வேஷத்தை மறைத்து
அந்தக்குறைவு உமக்கில்லையோ!

கருடவாகனரும் அவர்களைப்பார்த்து
கம்பீரமாய் ஒருவார்த்தை சொல்வார் ;
ஒருக்காலும் உங்களுக்கு மரணமில்லாத ஓர்
உபாயத்தைச் சொல்லுவேன்—சோபனம் சோபனம். 27
அங்கேபோய்ச் சொல்லுங்கள் அஸுராளுடனே
அம்ருதபானஞ் செய்தோமானுக்கால்
உங்கட்கும் எங்கட்கும் சாவில்லை ஒருக்காலும்
எல்லோருமாயம்ருதங் கடைவோம்
இப்படிச்சொல்லி அஸுராளை எல்லாம்
இங்கே கூட்டிக்கொண்டு வாருங்கோள்
அப்போ அஸுரருக்கு வேலை மாத்திரம் மிஞ்சும்
அம்ருதம் உங்களுக்குத்தான்—சோபனம் சோபனம். 28
பாற்கடலில் நான்கு ஔஷதிகளையும்
பறித்துக்கொண்டுவந்து போடுங்கள்—
நிற்காமல் போய் மந்தரத்தை மத்தாகவும்
நீண்ட வாஸுகியைக் கயிருகவும்
வைத்துக்கொண்டு கடலைக் கடைந்தீரானால்
வருமதிலேயிருந்து அம்ருதகுடம்—
நிச்சயமாய் உங்களுக்குத்தான் அம்ருதம்
நீங்களே புஜிப்பீர்கள்—சோபனம் சோபனம். 29

## தேவர்களும் அஸுரர்களும்கூடி அம்ருதங்கடைதல்

சாரங்கருடைய சம்மதத்தை எல்லாம்
சகல தேவாளும் அஸுராளுடன்
ஆங்காரமில்லாமற் போய்ச் சொன்னவுடனே
அந்தத் தானவா கேட்டு உள்ளதென்றே,
க்ஷீராப்திக் கரையிலே கூடிவந்தார்கள்
சீக்கிரமே நான்கு ஔஷதிகளையும்
சேர்ந்துகொண்டு அந்ததேவாளும் அஸுராளும்
க்ஷீராப்தியில் போட்டார்—சோபனம் சோபனம். 30
மந்தரகிரியை மத்தாகவே கொண்டுத்
வாஸுகியை கயிருகக்கொண்டு
தந்தியாய் வாஸுகியை மூன்று சுற்றுக்கி
தலைப்புறத்தை அஸுராளிழுத்தாள்—
வாஸுதேவருடைய ஆக்ஞையால் தேவர்கள்
வால்புறத்தைப் பிடித்திழுத்தார்கள்
ஈசரும் பிரும்மரிஷிகள் கந்தர்வாளும்
இது பார்க்க வந்தார்கள்—சோபனம் சோபனம்'- 31
மந்தரகிரி அமிழ்ந்து போவதைக் கண்டு
மாதவரும் பார்த்துச் சங்கையுடன்

கீழேகூர்மமாகத் தாங்கி முதுகினில்
மேலேசங்கு சக்ரபாணியாகி
கூடித்தேவாளுடன் அம்ருதங்கடைந்து
கொடிய அஸுராளை மயக்கிவிட்டு
வாடுந்தேவர்கட்கு அம்ருதங்கொடுத்திட
மனதில் நிச்சயித்தார்—சோபனம் சோபனம். 32
இழுக்கின்ற வேதனை பொருக்காமல் வஸுகி
எரிக்கும் விஷத்தையப்போ கக்கியது
மழைப்போலெல்லாரையும் எரிக்கத் தொடங்கிற்று
மதனத்தை விட்டோடத் துவக்கினார்கள்;
பக்தாளுக்காபத்தைத் தீர்க்க வேண்டுமென்ற
பரமேசரும் விஷத்தை விழுங்கிவிட்டார்
ஸ்தோத்தரித்துப் பரமேசரைப் பின்னும்
துவக்கினார் மதனத்தை—சோபனம் சோபனம். 33
பாரிஜாதங் காமதேனுவும் ரத்னமும்
பிறந்து தேவேந்திரனிடம் சேர்ந்தது—
நாரியரும் வந்தாள் பாலசந்த்ரனும் வந்தான்
இந்திரனும் ஈசரும் அடைந்தார்கள்—
பின்னும் அநேகம் ரத்னங்களும் வந்திடப்
பிறகு அம்ருத கலசங்கொண்டு
தன்வந்தரி வந்தார் லக்ஷ்மிதேவி வந்தாள்
ஸ்வாமி விஷ்ணுவைச் சேர்ந்தாள்-சோபனம் சோபனம். 34

## மோஹினி அவதாரமாகி அஸுராளை மயக்கி அம்ருதத்தை பங்கிடல்—ஹரிஹர புத்ரர் உற்பத்தி.

வஞ்சக அஸுராள் அம்ருத கலசத்தை
வந்து பரித்துக்கொண்டு ஓடினார்கள்
என்னசெய்வோமென்று தேவரும், போய்ப்பிடிக்க
இவர்கட்கும் அவர்கட்கும் சண்டையாக
லோகேசர் ஹரியிந்தச் சண்டையைக்கண்டு
(லோக மாயையை தியானித்தார் ஒருமுகூர்த்தம்
மோஹினி வேஷந் தரித்து அசுரர்களை
மோகிப்பித்தாளம்மன்—சோபனம் சோபனம். 35
சண்டை பிடிக்கின்றவர் நடுவிலே மோகினி
சந்தோஷமாய் மெள்ள நின்று வாராள்
தண்டை கொலுஸுபாதஸரம் பீலி காலாழி
தரித்தாள் நவரத்தினத்தால் பாதங்களில்
இழைசேர்ந்த பட்டுடன் மேகலாபரணமும்
இடையில் ரத்னக்கச்சை புறத்தில் கட்டி
இணையில்லா ரவிக்கையுடன் மார்பில் முத்துவடம்
இலங்கும் கைவளையுடன்—சோபனம் சோபனம். 36

மாதளம் பட்டுப்போல் உதடுங் கனிவாயும்
மதனன் வில்லைப்போல் புருவங்களும்
காதுக் குண்டலத்துடன் மூக்கு நத்துஞ் ஜொலிக்க
கருங்குழலாள் பின்னல் சுட்டிமின்ன
தரித்துவருகின்ற மோகினியைக் கண்டு
தானவாள் சண்டையை நிறுத்திவிட்டு
ஆரிவாள் என்று சுற்றிருந்து அஸுராள்
அமுருதத்தை மறந்தார்கள்—சோபனம் சோபனம் 37

அப்போ மோகினிசொல்வள் அஸுரர்களுடனே
ஐயன்மார்களே கேளும் சண்டையானல்
இப்போதென்கையிலே தந்தாலம்ருதத்தை
எல்லாத்தேவருக்கும் கொடுத்துக் கொஞ்சம்
கலசம் உங்கள் முன்னே தான்வரும் நிச்சயம்
காரியமென் றுங்கட்குத் தோன்றினல்
மலைக்காமல் தாருங்கள் அம்ருதகலசமென்று
மாய்கை மோகிப்பித்தாள்—சோபனம் சோபனம் 38

மூடஅஸுராளும் அம்ருதத்தைக் கொடுத்துபின்
மோகித்து வரிசையாய் இருந்தார்கள்
உடனே தேவரும் ஒருவரிசையாய் இருந்தார்கள்
ஒகோ தேவர்க்கம்ருதம் பொழியுகிருள்
சொர்ணக்கரண்டியால் பரிமாறும்போது
சோபிக்கும் வளை பாதஸரங்குலுங்க
சொர்ணம்போல் மோகினியைக்கண்டு அஸுராள்
சும்மா யிருந்தார்கள்—சோபனம் சோபனம் 39

பொட்டென அவ்வளவும் தேவர்கட்கு
பொழிந்துகொண்டொடுக்கத்தில் வரும்போது
ஓட்ட எடுக்கும்போது அகப்பையினுடைய
ஓசை குடத்திற்குள் கேட்கின்றது
மடையர் அஸுரர்களுக்கு அது கூடதெரிய(வி)ல்லை
மாய்கையை அறிந்தார் ராகு கேதுவும்
நடுவில் ஒளிந்து சந்திரசூரியாளுடனே
ராகுவுங்குடித்தான்—சோபனம் சோபனம் 40

சந்திராதித்தன் முதல் தேவாளுக்கெல்லாம்
சம்பிரமமாய் அம்ருதம் பொழிந்தாள்
சந்திரபாஸ்கரன் சொல்லிக் கொடுக்கவே அகப்பையால்
தலையை அரிந்தாள் ராகுவை மாகினி
ராகுவின் தலையிரண்டாயாகாசத்திற் போச்சு
(ராஜ)நாயகி கலசத்தை அஸுராள் முன்னே
வைத்துவிட்டு மோகினி அந்தர்த்தானமானுள்
விழிக்கிருர் அஸுரர்கள்!—சோபனம் சோபனம் 41

காணுதே மோஹினிதேவியையும், வெறுங்
கலசத்தையும் கண்டார் அஸுரரெல்லாம்
துணித்துவிடுவோமென்று அமரருடனே
தொடுத்தார்கள் யுத்தத்தை பின்னுமவர்
சுதையுடபலத்தாலே தேவர்கள் அஸுரரை
துரத்தினுர் அடித்துப் பாதாளத்திலே!
ஸ்துதித்துக்கொண்டு விஷ்ணுவை ஸ்வர்க்கலோகத்தில்
ஸுகமாக இருந்தார்கள்—சோபனம் சோபனம் 42

இந்த விருத்தாந்தத்தை நாரதரோப்டிபோய்
ஈசரிடத்தில் சொல்லி அறிக்கையிட்டார்
அந்தக்ஷணம் சிவன் க்ஷீராப்திக்கரை தன்னில்
வந்து விஷ்ணுவுடன் வாக்குரைப்பார்,
லோகமாய்கையால் ஒரு ரூபம் எடுத்தீராம்
ஒருதரம் எனக்கதைக் காட்டுமென்றுர்
ஆகட்டுமென்று விஷ்ணுவுஞ் சிவனை விட்டு
அந்தர்த்தானமானுர்—சோபனம் சோபனம் 43

உமையின் பதியங்கே சுற்றிப்பார்க்கும்போது
உத்தியானவனங்கண்டார் அவ்விடத்தில்
அதிரூபமான மோகமாம் பெண்கொடி!
அழகாகப் பந்தாடிக் கொண்டிருந்தாள்!
கண்டவுடன் சிவன் உமையைவிட்டோடிப்போய்
கட்டிப்பிடித்து ஆலிங்கனமுஞ் செய்தார்!
உண்டார் ஹரிஹரபுத்ரர் உடனே
உயர்விந்து மர்த்தன—சோபனம் சோபனம் 4

மோகினியும் அந்தர்த்தான மடைந்தாள்
மோகந்தெளிந்து சிவனுமையுடனே
வாகனமான ரிஷபத்தி லேறியே
வந்து கைலாஸத்தில் வஸித்திருந்தார்
முன்னே பிரும்மாவை ரக்ஷிக்கவந்தாளே
முதலாவது அந்த அவதாரம்
பின்னே இப்பொழுது சொன்னேம் மோகினிரூபம்
பின்னுங்கேள் இ(வி)ரண்டு—சோபனம் சோபனம் 45

லலிதாதேவியுடைய மகிமை தன்னிலே
லக்ஷங்கோடியுள்ளதில் லேசஞ் சொல்வோம்
கேளும் பக்தியுடன் கேட்டவர்க்கு மங்களம்
கிட்டும் நிச்சயம் சந்தேகமில்லை

பூர்லத்தில் தக்ஷனுடைய கன்னிகையாக்கும்
 பூர்வாவதாரம் பரமேச்வரிக்கு
பாம்பவர் சொன்னி தகப்பனுர் யக்ஞத்துக் கூத்
 தாக்ஷயாயணி போனுள் — சோபனம் சோபனம் 46

தகப்பனுந்தாயும் அம்மாவந்தாயாவென்று
 சொல்லவில்லை தேவி பொறுத்திருந்தாள்
முப்புரமெரித்தவருடைய பாகத்தையும்
 முடக்கி விட்டெக்ஞத்தைச் செய்தான் தக்ஷன்!
ஈசர்பாகத்தை முடக்கினதால் தேவி
 இவன் பெண் என்பதை மாற்ற வேணுமென்று
விசையாய் அக்கினியிலே மறைந்து பார்வதியாக
 வேறே அவதறித்தாள்—சோபனம் சோபனம் 47

இதைக்கேட்டு ஈசனும் தக்ஷன் தலையைக்கிள்ளி
 எரித்துவிட்டெக்ஞம் நிறைவேற்றிவிட்டு
வந்து இமயகிரி தடத்தில் கங்கைமுன்னே
 வடமூலத்தே யோக தபசிருந்தார்
பர்வதராஜனும் நாரதர் சொல்லாலே
 பார்வதி ருத்ராணி என்றறிந்து
பார்வதி தேவியை தகப்பனுர் ஈசர்க்குப்
 பணிவிடை செய்வித்தார்—சோபனம் சோபனம் 48

ஸ்வாமி இப்படியாகத் தவஞ்செய்யும் போது
 தாருகாஸுரன் சூரன் உண்டானுன்
ஸ்வாமியின் பிள்ளையல்லாமல் ஒருவராலும்
 சாவில்லை இவர்கட்கு வரத்தினுலே
தாருகாசுரனடி பொறுக்காமல் தேவர்கள்
 ஸ்வாமிமுன் மன்மதனை ஏவினுர்
வாராய் மன்மதனே தேவியோடீசரை
 வாழும்படிக்குச் செய்வாய்—சோபனம் சோபனம் 49

தேவான் சொன்னபடி மன்மதன் பாணத்தால்
 தேவதேவரைத் தொடுத்தடித்தான்
தேவர் கோபத்தினுல் பார்த்து மன்மதனைத்
 தகித்துச் சாம்பலாக்கினுர் மூன்றுங்கண்ணுல்
பயந்து பார்வதியம்மன் அதைக்கண்டு ஓடிப்போய்
 பர்வதராஜன் சொல்லால் தபஸிருந்தாள்
மன்மதன் சாம்பலைப் பிசைந்து விச்வகர்மா
 மனித உருவஞ் செய்தான்—சோபனம் சோபனம் 50

## பண்டாஸுரன் உற்பத்தியாகுதல்

சாம்பமூர்த்தியுமப்போ அம்ருத கடாக்ஷத்தால்
சாம்பல் பொம்மையை பார்த்தார் பார்த்தவுடன்
சாம்பசிவனுடைய அம்ருத கடாக்ஷத்தால்
சாம்பல் புருஷன் ஜீவனோடெழுந்தான்
விஸ்வகர்மா அந்தக்குழந்தையைக் கொண்டுபோய்
விருப்பத்துடனே வளர்த்த பின்பு
வேண்டிய வரங்களை அடையும் பொருட்டவன்
ஈசனைப் பூஜித்தான்—சோபனம சோபனம் 52

அறுபதினாயிரம் வருஷம் சாம்ராஜ்யமும்
அவனுக்குக் கொடுத்தார் பரமேச்வரர்
மற்றுமொருவர் அவனை ஜயிக்காமல்
வரத்தையும் கொடுத்து அனுப்பிவைத்தார்
அவர்கோப அக்கினியில் உண்டான தாலிவன்
அசுரன் ஆகினான் இதைக்கண்டு பிரும்மா
அமரசத்துருவானான் பண்டுபோல் என்றார்
ஆகையால் பேர்பண்டன்—சோபனம் சோபனம் 53

பண்டாஸுரனிப்படி யுண்டானவுடனே
பாதளத்தில் போன அசுரர்கள் கேட்டு
கண்டக அசுரர்கள் பண்டாஸுரனைச் சேர்ந்து
கற்பித்தார்கள் பட்டணம் உண்டாக்கவே
எமனை வருத்திப் பாண்டாஸுரன் உடனே
மஹேந்திர புரிக்குத் தெற்குப் பக்கத்தில்
செய்யச் சொன்னான் சோணிதாபுரத்தைமயனும்
செய்தானிதை நன்றாய்—சோபனம் சோபனம். 54

## பண்டாஸுரன் அரசாட்சி

சுக்கிரபகவான் கொணர்ந்து கொடுத்தார் கிரீடம்
சிம்மாசனம் வெண்சாமரக் குடையும்
சுக்கிரன்போல் யோசனையுள்ள தம்பியான
விசுக்ரனை வலது தோழில் சிருஷ்டித்தான்
இடது தோளில் தம்பி விஷங்கனை சிருஷ்டித்தான்
இன்னமொருத்தி தங்கை திமினி என்பாள்
வடிவுள்ள நான்கு பெண்டாட்டியுண்டவனுக்கு
வாதாபிமர்த்தன—சோபனம் சோ[illegible]. 55

அஷ்டமந்திரிமார்கள் மந்த்ராலோசனை சொல்ல
அவர்களைக்கொண்டு ராஜ்யம்நடத்துகிறன்
துஷ்ட அஜுராளின் துர்புத்தி கேட்காமல்
சுக்கிராசாரி நித்தம் புத்தி சொல்வார்
அதிதிபூஜை ஹோமம் சிவபூஜை நேமங்கள்
அஸுராளும் செய்கின்ருர் சுக்கிரன் சொல்லால்
மதியும் தர்மமாச்சு பண்டாஸுரனுக்கு
வாழ்வு வந்தபொழுது—சோபனம் சோபனம். 56

பண்டாஸுரனுக்கு பலநாளைக்குப்பின்பு
கெட்ட புத்திவந்து தேவர்களைப்
பிடிக்கத் துவக்கினன் வாசவன் முதலாகப்
பிடித்துக் கொண்டுவந்து தன் கொட்டையில்
காவல் காக்கச்சொல்லிச் சேவகராகவே
கட்டளையிட்டான் தேவர்களை
துஷ்டன் கையிலகப்பட்டு விழிக்கிருர்கள்
வில்வலாந்தகனே கேள்—சோபனம் சோபனம் 57

தங்கட்குவினையை தேவாள் வருத்திக்கொண்டார்
தாருகா சுரனை வதைக்கவெண்றே
சங்கரனிடத்தில் மன்மதனை ஏவப்போய்
தானே வலையில் விழும்புலியைப்போல
ஸ்வாமி தபஸிற்கு துரோகம் நினைத்ததால்
சத்ருவாகினன் பண்டாஸுரன் :
வம்பன் பண்டாஸுரனை வதைப்பதற்கு
மனதில் நிச்சயித்தார்கள்—சோபனம் சோபனம் 58

நிச்சலர்படுகிற சங்கடமறிந்து
சத்துரு சம்கார மகாவிஸ்ணுவும்
அச்சுதரும் மாயாசக்தியை வருத்தி
அசுரர்கள் மோகிக்கும் ரூபமதாய்
சொல்வர் மஹாவிஷ்ணு "தோழிமாயை நீயும்
துஷ்டன் பண்டாஷுரன் தர்மங்களை
ஒன்றையும் அவர்கள் செய்யாமல் மோஹிப்பித்து
உபத்திரவி போ'; என்ருர் சோபனம் 59

---

✡ அகஸ்தியர் வாதாபி என்னும் அஸுரனை ',வாதாபி ஜீர்ணோ பவ!" என்று தம்முள் ஜீரணிக்கச்செய்து கொன்றதால் அவருக்கு இந்தப்பெயர் வந்தது

உத்தரவாலே மாயையுந் தனக்கு
ஒப்பான எட்டுத்தோழிமாருடன்
உத்தியான வனத்திலே பாண்டாஸுரன் நித்யம்
உதயத்தில் குளிக்குங் குளக்கரையில்
பச்சைக்கல்லிழைத்த படித்தட்டின்மேலே
பாடுகிருள் மாயை வீணையுடன்
பிச்சுக்கொடிமேலே குயில் கூவினற்போல
பெண்கொடி பாடுகிருள்—சோபனம் சோபனம் 60

நித்யம் வருவதுபோல் மந்திரிமாருடன்
நீராடவந்தான் பாண்டாஸுரனும்
சித்திராங்கியான மங்கையைக் கண்டான்
தேன்மொழியாளுட பாட்டுங் கேட்டான்
மாய்கையையடைந்தான் பண்டாஸுரனும்
மந்திரிமார் எட்டுப் பெண்களைச் சேர்ந்தார்
மாய்கையுடன் அவன் மஞ்சத்திலிருந்தான்
வாழ்வு தேவர்க்காச்சு- சோபனம் சோபனம். 61

மாய்கையாகிய மடிவில் விழுந்தான்
மறந்தான் பண்டாஸுரன் சிவபூஜையை
வருஷங்கள் அறுபதினயிரமும் பண்டை
வரமுங் கழிந்தது நிமிஷம்போலே
குடிலாக்ஷன் முதலான மந்திரிமார்களும்
கூடினர் இவன்போலே மாய்கைகளை
அடித்துப்பறித்தாலும் ஆருேடிப்போனலும்
அவனுக்குத் தெரியாது—சோபனம் சோபனம் 62

அந்தசமயத்து நாரதரோடிப்போய்
அமராளுக்கு நல்ல புத்தி சொல்வார்
அஸுரன் மந்தப்புத்தி கண்டிந்த வேளையில்
(மகா) தேவியை ஆராதனை செய்யுங்கள்
தேவி வந்தால் உங்கள் சங்கடங்கள் தீரும்
செய்யுங்கள் தபசை தாமஸியாமல்
இப்படித் தேவர்க்கு புத்தி சொல்லிவிட்டு
ஏகினர் நாரதர் – சோபனம் சோபனம் 63

## தேவர்கள் அம்பிகையை ஜபத்தால் தியானித்து ஹோமஞ் செய்தல்

தேவமுனிசொல்ல இந்திரனுடன் கூடச்
செய்கிருர் தேவர்கள் உக்கிர தபஸை

ஈஸ்வரியை நோக்கி வருஷம் பதினையிரம்
      இப்படித் தேவர்கள் தபஞ்செய்தார்கள்
ஆகார நித்திரை விட்டெல்லா தேவர்களும்
      அதிகடினமான தபஸிருந்தார்
பகவதி ஈஸ்வரியாள் இதுவரைக்கும்
      பிரத்தியக்ஷ மாகவில்லை சோபனம் சோபனம் 64

அஸுர குருவும் தேவர் தாஸைக்கண்டு
      அவருட முதல் கொள்ளை போனதுபோல்
விசையாய்வந்து பண்டாஸுரனுடன் சொல்லி
      விக்கினஞ்செய்யச் சொன்னுன் தேவர்கட்கு
சேதியை கேட்டவுடன் மாய்கையைவிட்டு
      சிம்மாசனத்தில் வந்துயோசித்தான்
வதஞ்செய்கிறேமென்று சேனையுடனே வந்தான்
      வானவர் தங்களிடம்—சோபனம் சோபனம் 65

வந்திங்கே பார்க்கும்பொழுது தேவரைச்சுற்றி
      மாய்கையாலே ஒரு கோட்டை கண்டான்
தந்திரஞ் செய்தான் கோட்டையைப் பேர்த்திடச்
      சரிப்படாமலேயவன் ஓடிப்போனுன்
கோட்டையைக் கண்டு பயந்திங்கே தேவாள்
      கொடூரன் பண்டாஸுரன் போட்டதென்றே
சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தம்மனை
      சரணமானுர் தேவர்—சோபனம் சோபனம். 66

பின்னுமந்தத் தேவர் எல்லோருமாய்க்கூடி
      புத்தியால் ஒன்று நிச்சயித்தார்கள்
ஒன்று செய்வோம் தேவி ஜகத்திலே உண்டானல்
      ஓடிவந்து நம்மை இரக்ஷிக்கட்டும்
இல்லையாகில் நாம் அவரவர் தேகத்தை
      கணுக்கணுவாய் சேதித்து ஹோமஞ்செய்வோம்
நல்லக்கினி குண்டத்தில் உடம்புகளைத் தேவாள்
      நறுக்கி ஹோமஞ்செய்தார்—சோபனம் சோபனம் 67

## லலிதாம்பிகையின் அவதாரம்

கால் முதல் தோழ் வரை ஹோமஞ்செய்துதேவாள்
      கழுத்துடன் குதிக்க நிச்சயித்தார்கள்!
மின்னல் மலைபோல அக்கினி குண்டத்தில்
      மின்னிக்கொண்டொரு காந்தியுண்டாயிற்று!

ஆச்சரியத்துடன் தேவாள் தேஜஸைக் கண்டாள்
அதற்குள்ளே ஸ்ரீசக்ர ரதத்தைக் கண்டாள்
அழகான ஸ்ரீசக்ர ரதத்தின்மேல் லலிதா
அம்மனவதரித்தாள்—சோபனம் சோபனம் 68

வானுலகத்துத் தேவாள்தாபத்தைத் தீர்த்திட
வந்து லலிதை அவதாரமாய்
பட்டுக்குடைகவிய சித்திரப் பொன்ரதம்
பளிச்சுப்பளிச்சென்று ஒளிதிகழ
ஸ்ரீசக்கரராஜ ரதத்தின் தேவியும்
சிங்கார ரூபமாய்க் காந்திமின்ன
ஆலவட்டம் வெண்சாமரம் போடச் சகிகளும்
அக்கினிக் குண்டத்தின் நடுவில் வந்தாள் 69

பத்மராகத்தினுல் இருபாதங்களிலும்
பாதரஸம் பீலி கொலுசுகளும்
ஹம்கம்போலே யம்மன் நடையழகும் நல்ல
யானைத்துதிக்கைபோல் துடையழகும்
சிவந்த பீதாம்பரம் உடுத்தபின் தட்டும்
சிறுத்த இடையில் ரத்னமேகலையும்
நவநீதம் போன்ற தொப்புள் சின்னஉதரத்தில்
அழகாய் மும்முடிப்புடன்—சோபனம் சோபனம் 70

தாமரை மொட்டுப்போல் தளதளென்று இரு
ஸ்தனங்களும் சரப்பளி முத்துஸரம்
கமுகுசங்குபோல் கழுத்தும் ஜவந்திவகை
கட்டிய மாலைகளும் நான்குகையும்
நவரத்ன மிழைத்திட்ட வளையுங் கொலுஸுடன்
நாலுகையில் கணையாழி மின்ன
நவக்கயிறும் கரும்பும் துரட்டியும் புஷ்பமும்
நான்கு கையிலுமுண்டு—சோபனம் சோபனம் 71

பவளம்போல் உதடும் குருக்கத்தி மொட்டுப்போல்
பல்லுகளின் ஒளி காந்திகளும்
கருநீலப் புஷ்பம்போல் விழியும் தாழம்பூப்போல்
காதுகளும் விற்போல் புருவங்களும்
அழகும் சம்பக மொட்டுப்போல் மூக்கு நத்தும்
புல்லாக்கும் கண்ணாடிபோல் கன்னங்களும்
இருகாதில் ஓலைகுண்டலம் வாளிமுதலாய்
இலங்கும் சந்திரமுருதம்—சோபனம் சோபனம், 72

அர்த்தசந்திரகார நெற்றியில் சிந்தூரம்
அதிசிவப்பாம் மூன்றுங்கண்ணதுபோல்
அர்த்தசந்திரக் கலையும் சுட்டிராக்கொடியும்
அழகு நீலமான கேசத்தின்மேல்
சிந்தாமணி ரத்தினத்தாலே கிரீடம்
சிரசிலே தரித்துக்கொண்டிருக்காளம்மன்
சந்தனங் கஸ்தூரி புனுகு பூமாலையும்
தரித்து மாதாவந்தாள்—சோபனம் சோபனம் 73

மண்டல பால அர்க்கன் போலம்மன் வாணமும்
வளமுள்ள சந்திர காந்தி சீதளமும்
கண்டவுடன் தேவியை கைகூப்பித் தேவர்கள்
கனகத்தடி போல் விழுந்து பணிந்தார்கள்!
தேவர்களுடைய தேகரணத்தைக்கண்டு
ஸ்ரீலலிதை மெத்த இரக்கத்துடன்
அவ்வளவுபேரையும் அம்ருதக்கண்ணால் பார்த்து
அங்கக் குறைகள் தீர்த்தாள்—சோபனம் சோபனம் 74

திடமான தேகத்தை அடைந்தார்கள் தேவர்கள்
தேவியுடையகிருபை அனுக்கிரகத்தால்
அடிக்கடி நமஸ்கரித்து விட்டுக்கீர்வாணர்
அஞ்சலி பண்ணி ஸ்துதி செய்கிறார்
ஓம்நமோ நாராயணியே பகவதி
உம்மைத்துதி செய்கின்றோம் அதிதிபுத்திராள்
இன்றுபோல் எங்களுட ஆபத்தெல்லாந்தீர்ந்து
என்றும் எங்களை ரக்ஷி—சோபனம் சோபனம் 75

மூன்றுலகங்களையும் நான்குவேதங்களையும்
முழுவதையும் பெற்றமாதா நீரே
வானுலகம் ஸர்வ ராஜ்யாதிகாரமும்
வாழும் சாம்பிராஜ்யமும் கொடுப்பது நீர்
ஏழுவகை பேதத்தின் என்பத்திநான்கையும்
சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தோம் உமது
சரணாம்புஜங்களில்—சோபனம் சோபனம். 76

அதலவிதலாஸா சுவர்க்கங்களிலும்
அம்பிகையின் தேக ஒளிகள் வீச
கதையும் ஸ்வாதாவுடன் அளகேசன் அக்கினி
ஸுரர்கருடர் கின்னரர் சித்தர்களும்

ஹரிபிரும்ம ஈசருடன் எல்லாம் உனது ரூபம்
யாராலே ஸ்தோத்திரம் செய்து முற்றும்
லேசம்சொன்னேம் மகிமைலக்ஷங்கோடி யுள்ளத்தில்
லலிதைக்கு நமஸ்காரம்—சோபனம் சோபனம் 77

## லலிதாம்பாள் தேவர்களுக்கு அபயம் அளித்தல்

ஸ்துதியாலே மெத்தமனங் குளிர்ந்தீஸ்வரி
சொல்லுவாள் திரும்பவும் கீர்வாணர்க்கு
இன்றுமுதல் பயத்தைத் தூரவிட்டு விடுங்கள்
இந்தப் பண்டாஸுரன் நமக்குப்பஞ்சு
அரை நிமிஷத்தில் பண்டாஸுரப் புழுவை
அக்கினி எறித்தாற்போல் வதைத்திடுவோம்
ஒருவாக்கிற்கு மறுசொல்லில்லை நமக்கு
உங்கட்கே மங்களம்—சோபனம் சோபனம் 78

## லலிதாம்பாள் கல்யாணம்

அம்மனும் அவதார மானதையறிந்து
அப்போது பிரும்மா விஷ்ணு ருத்ரன் வந்தார்
மும்மூர்த்திகளுடன் முனிவர்கள் கந்தவர்வர்
கின்னரர் கிம்புருடர் அப்ஸரஸ்ஸும்
வைரவர் க்ஷேத்ரபாலர் கந்தன் கணபதி
எட்டுத்திக்குப் பாலரும் சக்திகளும்
வராகி சாமுண்டி மாதங்கி முதலேழு
மாதாக்களும் வந்தார்—சோபனம் சோபனம் 79

சகலரும் வந்து லலிதாதேவியுடைய
சன்னதி நிரம்பி இருந்தார்கள்
மஹாதேவியை நமஸ்காரஞ் செய்துவிட்டு
வாழ்த்தி ஸ்துதித்துக்கொண்டிருந்தார்கள்
நான்முகர் ஆக்ஞையால் தேவிக்கு மண்டபம்
நல்ல சிற்பி விஸ்வகர்மாவினுல்
ராஜேஸ்வரிக்கு இசைந்தாப்போலவே கிரகம்
நிர்மாணஞ் செய்துவைத்தார்—சோபனம் சோபனம் 80

அம்மன் கிருபையாலே விஸ்வகர்மாவும்
அழகான புரங்களும் சபைகளுடன்
சிந்தாமணி ரத்னம் பளபளவென்று மின்ன
சிம்ஹாஸனம் உண்டுபண்ணி வைத்தான்

பட்டண அமைப்பையும் அம்மன் தன் அழகையும்
பார்த்துப் பிரம்மதேவர் யோசிக்கின்றார்
நாட்டுக்குப்பதியான அம்மனுக்கிப்போ
நாயகர் வேண்டுமே—சோபனம் சோபனம் 81

தேவிக்குக் கணவனார் ஈசர் அல்லாமல்
ஜகத்திலே வேறே ஒருவரில்லை
அவருக்கோ ஆனால் சுடலையில் இருப்பு
அரவமும் எலும்புமே ஆபரணம்
சாம்பலும் பூசி சடையுந்தரித்து
தலைமண்டை யோட்டையுங் கையிற்கொண்டு
அம்பலத்தாடினார் இவருக்குக் கணவராய்
ஆகுவதெப்படி—சோபனம் சோபனம் 82

இப்படி பிரும்மா மனதிலெண்ணியதை
ஈசர் அறிந்து நல்ல ஒளியுடனே
முப்பதுகோடி மன்மதாகாரரூபமாய்
வேஷந்தரித்ததி ஸுந்தரமாய்
மகுண்டகுண்டலத்துடன் அழகு பீதாம்பரமும்
மார்பில் சந்தனம் முத்துமாலையுடன்
மோகனவேஷம் தரித்திந்தபடி தேவி
முன்னே நின்றாரீசன்—சோபனம் சோபனம் 83

நின்றநிலையில் அதிஸுந்தரமான
லலிதாதேவிக்கு இசைந்த அழகும்
என்றும் பதினாறு வயதுந்தரித்துக்கொண்டு
இருக்கின்ற ஈசரைக்கண்டு பிரும்மா
காமேஸ்வரரென்று பேருமிட்டவருக்கும்
கண்ணுட்டி லலிதேஸ்வரி தேவிக்கும்
ஓமென்று இவர்கள் இரண்டுபேருக்கும் இப்போ
விவாகஞ் செய்யலாமென்றார்—சோபனம் சோபனம் 84

கமலாசனருடைய ஆக்கினையால் விஸ்வ
கர்மாவும் மயனும் இருபேருமாய்
கமனியமாய் ஸ்வர்ண ரத்னங்களாலே
கலியாண மண்டபம் உண்டாக்கினார்
வாழை கமுகு கரும்பு பூச்சரங்களும்
வாடாத மாலையும் நிறைத்தார்கள்
கொழுந்துபிச்சி மருகுடமல்லி இருவாக்ஷி
கோலாஹலம் செய்தார்—சோபனம் சோபனம் 85

சோடித்துக் கலியாணத்துக்கெல்லாம் பிரம்மாவும்
கோவிந்தருடைய சம்மதத்தாலே
ஒடுக்க வணக்கமாய் அம்மனைப் பார்த்து
உம்மைக்கணவருடன் பார்ப்போமென்றார்
மாதாவும் தன்னுடைய கழுத்திலிருந்தொரு
மாலையைக் கழற்றி அம்பலத்தில் போட்டாள்
நாதர் காமேஸ்வரர் கழுத்திலந்த மாலை
ராஜியாய்ச் சேர்ந்தது—சோபனம் சோபனம். 86

கீழ்வாணர் வாத்தியம் பதினெட்டும் முழக்கினர்
கீழ்வாணர் புஷ்ப வருஷஞ்சொரிந்தார்
ஊர்வசி முதலானோர் நர்த்தனஞ் செய்தார்கள்
உடனே கல்யாண வேஷம் தரித்தார்
ஈசருந்தேவியும் மாலையிட்டார்கள்
இருவரும் இருந்து கன்னூஞ்சல் ஆட
வாஸுதேவராலே உமையவளைத்தாரை
வார்க்கச் சொன்னார் பிரம்மா—சோபனம் சோபனம். 87

பத்மாஸனர் சொல்லால் நல்ல முகூர்த்தத்தில்
பரிமளிக்கும் தேவசபை நடுவே
பத்தினியுடன் கூட விஷ்ணு காமேசருக்கு
பக்தியாய் மதுவர்க்கந் தான்கொடுத்தார்
காமேஸ்வரருக்கு லலிதேஸ்வரியை
கன்னிகாதானம் செய்தார் மகாவிஷ்ணுவும்
காமேஸ்வரரும் திருமங்கலிய தாரணம்
கட்டினார் லலிதைக்குச்—சோபனம் சோபனம் 88

நெய்யால் ஹோமஞ்செய்து பாணிக்கிரகணஞ் செய்து
ஈசர் அம்மனை அம்மி ஏற்றினார்
மெய்யாக அக்கினியை மூன்றுதரஞ் சுற்றி
முக்கண்ணர் பொரியினால் ஹோமஞ்செய்தார்
காமேஸ்வரரும் லலிதேஸ்வரியைத்தான்
கலியாணஞ்செய்துகொண்டார் ஸுகமாய்
பூமிமுதல் மூன்று லோகத்தவர்களும்
புகழ்ந்தார்கள் அகஸ்த்யரே—சோபனம் சோபனம். 89

காமேஸ்வரருக்குங் காமேஸ்வரிக்கும்
கரும்பு வில்லுக்களைக் கொடுத்தார் பிரும்மா !
பூமீசர் விஷ்ணுகொடுத்தாருடனே
புஷ்ப பாணங்களை இருபேருக்கும்

வருணன் கொடுத்தான் பாசம் விஸ்வகர்மா
வாழ்த்திக்கொடுத்தான் இரண்டு துரட்டிகளை
உறங்காமல் அக்னி வாயுவுங்கொடுத்தார்கள்
ஒளியான அஸ்திரங்கள்—சோபனம் சோபனம். 90

அவரவராலேயான அஸ்திரங்களை
அம்பிகை முன்வைத்தார் அமரரெல்லாம்
கலியாணம் ஆனபின் ஸாம்ராஜ்ய அபிஷேகம்
காமேசருக்கும் காமேஸ்வரிக்கும்
பட்டாபிஷேகத்தைச் செய்தார் தேவரெல்லாம்
பரிபாலனஞ் செய்து ரக்ஷிக்கவே
பட்டணப்ரவேசத்துக்கும் புஷ்பவிமானத்தை
பத்மாஸனர் செய்தார்—சோபனம் சோபனம். 91

பதினெட்டு வாத்தியம் மத்தளம் தாளங்கள்
பாட்டுப்புல்லாங்குழல் கேளிக்கையும்
மதயானை குதிரையும் கொடியாலவட்டமும்
வரிசையாய் முனிவரும் ஸ்தோத்தரிக்க
சோடித்து அம்மனையும் காமேஸ்வரரையும்
கோஷித்து விமானத்திலேத்திவைத்து
கோஷமாய் தெருவீதி வரும்போது ஹாரத்தி
கோதையர் எடுத்தார்கள்—சோபனம் சோபனம். 92

## தேவி பண்டாஸுரன்மேல் யுத்தத்திற்குப் புறப்படுதல்

ராஜக்கிரகத்தில் வந்து சிம்ஹாசனத்தில்
நாதரோடுகூட இருந்தாள் தேவி
பசித்த பேர்க்கெல்லாம் அபீஷ்டவரங்களைப்
பார்த்துக் கொடுத்தாள் கரிருதக்கண்ணால்
காமாக்ஷி என்ற பேர் கொடுத்து பிரம்மதேவாள்
காத்திருந்தாள் பதினாயிரம் வருஷம்
தேவியின் சந்நதியில் தேவாள் காத்திருப்பதை
தேவியிடஞ் சொன்னார்—நாரதர் சோபனம். 93

ஸுரமுனி வேண்டுதலால் தேவர்கிரகங்களுக்குச்
சொல்லியனுப்பினாள் அம்பிகையும்
வரத்தாலே மதங்கொண்ட பண்டாஸுரனையினி
வதைக்கவேணுமென்று ஈஸ்வரிதாள்
ரதகஜ துரக பதாதிகளுடன் கடல்
அலைபோல வருகின்றாள் சேனையுடன்

சதுரங்யமான சக்தி சேனைகளுடனே
சங்கரி வருகிருள்—சோபனம் சோபனம் 94

ஸ்ரீசக்ர ராஜரதத்திற் கொன்பது தட்டு
சிங்கார உருளைகள் நால்கு வேதம்
பூஜ்யமான தர்மார்த்த காமமோக்ஷம்
புனிதமான நான்கு குதிரைகளாம்!
ஆனந்தக் கொடிமாம் அதற்குமேலழகாய்
ஐந்து பேர் ஜனையகலம் முத்துக் குடை
முந்நூறு தேர்படை முழுதுஞ் சக்திகள் வாரார்
முழுத்தநும் தேவிக்குச்—சோபனம் சோபனம் 95

அம்மன் தொரட்டியில் இருந்தொரு வொரு தேவி
சம்பத்கரி என்று உண்டானுள்
நன்மையாகவே பின்னும் அச்வாருடையா யுதித்தாள்
நாகபசாத்திலே உண்டாகி
யானைகள் சம்பக்கரிக்குச் சேனையாம்!
அச்வாருடைக்குக் குதிரைகளாம்;
தாயார் மந்திரிணியுடைய ஸ்ரீசக்ரத்தில்
தட்டுக்களேழுண்டு—சோபனம் சோபனம் 96

மந்திரிணி தேரிலும் ஸ்ரீ சக்ரம் போலவே
மகா சத்திதேவிகள் நிறைந்திருக்காள்
விந்தையாய்ப் பதினறு நாமத்தால் தேவர்கள்
மந்திரிணியை ஸ்தோத்திரங்கள் செய்தார்
சியாமளையுடைய திருக்கையிலிருந்து
தானும்பாணத்தோடொரு கோதண்டத்தை
நமஸ்கரித்தம்மனிடம் வாங்கியே மந்திரிணி
நாயகி வருகிருள்—சோபனம் சோபனம் 97

தீர்க்க தண்டநாதை ஸ்ரீ சக்ரதேருக்குத்
திட்டமாக ஐந்து தட்டுகளும்
கர்க்கிகளான துர்க்கைகளும் அக்கினி
துர்க்கைகளும் வன துர்க்கைகளும்
தர்க்கமில்லா நல்லவர்க்கங்களான ரண
அர்க்கிகளும் மிக நிஷ்களமாய்
அர்க்கவர்ணிகள் பல வர்க்கங்களாய் எங்கும்
எக்காலும் தற்காப்பாள்—சோபனம் சோபனம் 98

வாராகி தேரிலும் சக்திகள் இருக்கின்றார்
வாராகி போன்ற பராக்கிரமமாய்

கோரமஹிஷம் மிருகம் சிம்ஹம் யாளிமேல்
கூட வருகிறார் சக்திகளும்
தண்டெடுத்துவரும் வாராகியைப் போற்றி
அப்ஸரஸ் திரீகளும் தேவர்களும்
கண்டு பன்னிரண்டு நாமத்தால் வாராகியைக்
கைகூப்பி ஸ்துதிக்கின்றார்—சோபனம் சோபனம் 99

இருபத்தைந்து நாமத்தாலே ஸ்ரீதேவியை
எல்லாத் தேவாளும் ஸ்துதி செய்கின்றனர்
ஒருவருக்கும் சொல்லக் கூடாது இதுகளை
உனக்குச் சொன்னோம் தன்யன் ஆனதினால்
இன்னுங்கேள் சொல்லுவோம் இனிமேற்றான் யுத்தங்கள்
இப்படி ஜகன்மாத வருகின்றாள்
பின்னுஞ் சக்தி சேனை வருகின்றதைக்கேட்டால்
பில்வி சூன்யந்தீரும்—சோபனம் சோபனம், 00 1

குந்தம் ஈட்டி வாள் பரசுபட்டயம் கத்தி
கோடாலி வில்லம்பு உலக்கைகளும்
மந்திரவாள் சூலம் கலப்பை முசலத்துடன்
வட்டக்கத்திகள் வெட்டுக்கத்திகளும்
வஜ்ஜிரஞ்சமுதாடு கதைகள் வல்லயமும்
பாணம் பாசம் சக்ராயுதமுங்கொண்டு
வஜ்ஜிரமாகிய மந்திரிணி வாராகி சேனையும்
வருகின்றதிப்படிச்—சோபனம் சோபனம். 101

பச்சைவர்ணி கீறுபச்சை வர்ணி பொது
பிச்சித் தொங்கல் வர்ணி மஞ்சள் வர்ணி
முச்சந்திவர்ணி முழுதும் நீலவர்ணி
மிஞ்சமுள்ள ஐந்து வர்ணிகளும்
துர்க்கை பிடாரியும் சடைச்சிகளும்
துய்ய வடிவுள்ள கேசிகளும்
கர்கியும் காளியும் இனங்கோபாளியும்
காளமேகம்போல் வாராள் —சோபனம் சோபனம் 102

பத்ரகாளிகள் ரணபத்ரகாளிகள் வீர
மர்த்தன காளிகள் ருத்திரகாளிகளும்
நெற்றியில் நெருப்புகள் உள்ள காளிகளும்
சுற்றி வட்டமாய் வந்துறுமிக் கொண்டு
அஷ்டநாகங்கள் அவர்களுக்காபரணம்
அல்லர்மலும் ரத்ன க்ரீடமுதல்

பட்டையரைஞாண் ஒட்டியாணஞ் சலங்கைமுதல்
பணிகளும் அவர்குண்டு—சோபனம் சோபனம் 103

கையில் முறுக்குவளை கணையாழி மோதிரமும்
கனத்தகொங்கைக் கவசமும் சரப்பழியும்
துய்யவர்ணப்பட்டு துலங்குந் தோடுந் தக்கை
சோபிதமாய்த் தொங்கும் முருகுமுதல்
சந்திரப்பிரபை சூரியப்ரபை தலையில் பின்னல்
சதுரான ராக்கொடி குஞ்சமுரங்கொட்டை
சிந்தூர சக்திகள் சுபசகுனங்கண்டு
தொகை தொகையாய் வாராள்—சோபனம்சோபனம்104

இன்னமுண்டு வைரவாள் பூதகணங்கள்
இந்தச் சேனை எண்ணத்தொகைகள் இல்லை
சொன்னோமின்னும் இவர் வாகனங்களைக் கேள்
தொகையில்லாத் தேர்களும் யானைகளும்
வாயு வேகமான வேகக்குதிரைகளும்
ஆயிரங்கோடி சிம்ஹ வாகனமும்
வாயுகருடனுக்கும் பூதலங்கள் முதலாய்
வாகனங்களில் வாராள்—சோபனம் சோபனம் 105

ஆலவட்டம் வெண்கத்தி குடைகள் கொடிகள் கொண்டு
அஸுராள்மேல் கோபிஷ்டைகளாக
கோலாகலமாய் யுத்தபேரி வாத்தியம் முழங்க
கொடி பறக்க அணியணியாய் வாராள்
தேவ வாத்தியம்முழங்க கந்தர்வர்கணம் பண்ண
தேவதாஸிகள் நாட்டியமாடிவர
தூயமுனிவர் மலர்சொரிய லலிதேச்வரி
சுகத்துடன் வருகிறுள்—சோபனம் சோபனம் 106

தேவி யுத்தத்திற்கு வருகின்றதைக் கேட்டு
திடுக்கிட்டுப் பண்டாஸுரன் சபையில்
கோபத்துடனே சிம்ஹாசனந்திலிருந்து
கூடிய அஸுராளோடு யோஜித்தான்
இடிபோலஅட்டகாஸஞ் செய்தான் கோட்டைவாசல்கள்
எல்லாவற்றிலுங் காவல்வைக்கச் சொன்னுன்
குடிலாக்ஷன் மந்திரியை யுத்தத்திற்கனுப்பினுன்
கோபிஷ்டை லலிதையுடன்—சோபனம் சோபனம் 107

அஸுரபதியுடைய வார்த்தையைக் கேட்டு மந்திரி
அதிகஸைன்யஞ் சேனுதிபதிகளுடன்

இசைந்துநாற்பது அசௌகிணி சேனைகளைக்கொண்டு
எல்லா வாசல்களையும் காக்கச் சொன்னான்
துர்மதனை யுத்தத்திற்குப் போகும்படிக்குச்
சொல்லியனுப்பினான் சேனையுடன்
துர்மதனை யுத்தத்திற்குப் போகும்படிக்குச்
சொல்லியனுப்பினான் சேனையுடன்
துர்மதனை சம்பத்கரியம்மன் வதைத்து
நிர்மூலமாக்கினாள்—சோபனம் சோபனம் 108

உரண்டி சம்பத்கரியால் உருண்டான் துர்மதனென்று
மருண்டு வந்தஸுரர்கள் முறையிட்டார்கள்
வெகுண்டு பண்டாஸுரன் குரண்டனையனுப்பினான்
உருண்டான் அவனும் அச்வாருடையாலே
புரண்டான் குரண்டனென்று தப்பிஓடிவந்தபேர்
மருண்ட பண்டனிடம் திரண்டு சொன்னார்
கரண்டி எண்ணெயைக் காய்ச்சி வரண்டிப் புண்ணில்
விட்டாற்போல்
கலங்கினான் பண்டனும்—சோபனம் சோபனம் 109

கரங்கர் முதலைந்து சேனாதிபதிகளையும்
துரங்காதி சேனையோடனுப்பிவைத்தான்
கடுவிஷமாயை சர்ப்பிணிப் பிசாசையும்
துரங்கனோடுகூட அனுப்பிவைத்தான்
பாவி சர்ப்பிணி அஸுரன் அக்கினையாலே
பாம்புகளைப் பெற்றாள் தன் தேகத்தால்!
ஏவினாள் பாம்புகளைச் சர்ப்பிணி சக்திகள்மேல்
எல்லா சக்திகட்கும் ஜயம்—சோபனம் சோபனம். 110

விதவிதசர்ப்பங்கள் விஷத்தைக் கக்கிக்கொண்டு
விழுந்ததுகள் சக்தி சேனையின் மேல்
இதைக்கண்டு நகுலியம்மன் கருடன் தோளில்
இருந்ததிவேகமாய் ஓடிவந்து
பாம்புக்கு மிருத்யுவாம் கீரிப்பிள்ளைகளைப்
பல்லுகளிலிருந்து விழவடித்தாள்
அம்மெட்டுப்பாம்பையும் துண்டமிட்டதுகள்
அம்மன் கீரிப்பிள்ளைகள்—சோபனம் சோபனம் 111

சீறிக்கொண்டு கீரிப்பிள்ளைகள் ஒன்றாய்க்கூடி
சேனை யானை குதிரை அஸுரர்கள்மேலே
ஏறிப்பிடித்துக் கடித்த க்ஷௌகிணிகளை
எல்லா அஸுரப்பேயையும் நொறுக்கியதுகள்

ஐந்து கரங்கள் கழுத்துக்களையும்
பிஞ்சுபோல் நறுக்கினாள் நகுலேஸ்வரி
அஞ்சாத நகுலிக்கு அங்கே தேவிமணியும்
அம்மன் மந்திரிணி ஈந்தாள்—சோபனம் சோபனம் 112

இவர்போனபின்பு பண்டாஸுரனனுப்பினான்
ஏழு பிலாஸ்கரர் மந்திரி ராணுவமும்
அவர் கண்ணில் சூரியனை வருத்தி வரத்தாலே
அம்மன் சேனையை ஸ்தம்பிக்கச் செய்தாள்
பிலாஸ்கரர் ஸ்தம்பனத்தைக் கண்டு தேவியின்
ஆக்கினையால் தண்டினி விசையாய் வந்தாள்
குருடாக்கி முன்னேழு மந்திரி தலைகளைக்
கொய்து மாலை தரித்தாள்—சோபனம் சோபனம். 113

மடிந்தார் மந்திரி என்று கேட்டுப் பண்டாஸுரன்,
வந்து தம்பிமார்களுடன் யோசித்து
குடிலாக்ஷனை பின்னுஞ் சேனையோட அனுப்பினான்
கொட்டிப் பெரிய யுத்தம் பண்ணச்சொன்னான்
லலிதையை பிடித்துக் கொண்டுவரச் சொல்லி
ஒளித்தனுப்பினான் தம்பிவிஷங்கனையும்
களவுசெய்யச் சொன்னான் பதினைந்தஸுராளுடன்
காமேஸ்வரிக்கு ஜயம்—சோபனம் சோபனம், 114

அஸ்தமித்த பின்னே மலகன் முதல்பதி
னைந்து அஸுராளோடே மெள்ள வந்து
சுற்றிலும் பதினைந்து அக்ஷௌகிணியால் தேரை
சுத்தி வளைந்துகொண்டான் விஷங்கனப்போ
தேரில் முதல் தட்டில் இருக்கின்றசக்திகள்
தேவிக்கு முறையிட்டு அலறினார்கள்
கோரமாய் குடிலாக்ஷன் யுத்தஞ் செய்கின்றான்
குறைவில்லை லலிதைக்குச்—சோபனம் சோபனம். 115

பின்னே கள்ளர் வந்து செய்யுங் கலகத்தைப்
புரட்டுச் செய்கையை தேவியறியாமல்
முன்னே தண்ட நாதை செய்கின்ற சண்டையின்
வேடிக்கை பார்த்தம்ம னிருந்துவிட்டாள்
துரோகி விஷங்கன் ஒரு பாணத்தால்தேரின்
துலங்கும் கொடிதன்னை அறுத்து விட்டான்
வேகமாய் புருவங்களை அம்மன் கோபத்தால்
வில்லுப்போல் வளைந்தாள்—சோபனம் சோபனம்: 116

மாதா முகத்தினுட கோபத்திலிருந்த
பாலிகள் பதினைந்து காமேசுவரிகள்
பாதக அஸுரனைக் கொல்ல ஆம்மனனுப்ப
புறப்பட்டாள் ஜ்வாலா மாலினிமுதல்
மலகன் முதற் பதினைந்தஸுரானையும்
வந்த சேனையைக் கொன்றுள் காமேஸ்வரிகள்
மெலிந்த விஷங்களை கொல்லாமல் துரத்தியே
லலிதையின் முன்வந்தார்—சோபனம் சோபனம். 117

குடிலாக்ஷனையுந் துரத்தினுள் வாராகி
கூடவந்த அஸுரானை கொன்றுள்
விடியற் காலங்கண்டு விஷங்கள் செய்ததுகளை
விசையாய் மந்திரிணி தண்டநாதையுமாய்
அம்பாளிடத்தில் சொல்லி ஜ்வாலாமாலினியாலே
அக்கினி கோட்டையைப்போடச் சொன்னுள்
தென்புறம் வீதியொரு யோஜனை வாசலில்
ஸ்தம்பினியும் காவல்—சோபனம் சோபனம். 118

முப்பது யோஜனை உயரமுள்ள கோட்டை
முழுதும் நூறு யோஜனை சுற்றளவு
இப்படி ஸ்ரீசக்ரத்தேருஞ் சேனையுங் கொண்டு
இருக்கின்றுர் சக்திகள் தீக்கோட்டைக்குள்
தம்பியும் மந்திரியும் தப்பி வந்ததையும்
சலியாத தீக்கோட்டை மகிமைகேட்டு
அன்பாய் முப்பது பிள்ளைகளைப் பண்டன் சண்டைக்கு
அனுப்பினுன் தேவிமேல்—சோபனம் சோபனம். 119

## லலிதாகுமாரியாதிய பாலாம்பிகையால் பண்டபுத்திரர் வதம்

பண்டபுத்ராள் சண்டைக்கு வந்ததைக்கண்டு
பாலாம்பாளைத் தேவியனுப்பிவைத்தாள்
கண்டித ரதத்தினில் ஏறிக் கொண்டு வந்தாள்
தண்டினி மந்திரிணி துணையாய் வந்தாள்
பண்ட புத்ரானையும் வந்த அஸுரானையும்
கண்டங் கண்டமாய்ச் சேதித்துத்துண்ட மிட்டாள்
மண்டலம் புகழத்தேவாள் புகழ்பாலை
மாதா அருகில் வந்தாள்—சோபனம் சோபனம். 120

## விநாயக மூர்த்தியால் விக்ன யந்திர மழிதல்

பாலாதேவி கையால் பிள்ளைகள் மாண்டதைப்
பண்டன் கேட்டுப்புலம்பிஅழுதான் மெத்த
கொலைபாதகன் விக்னயந்திரஞ் செய்யச்சொல்லி
கொடூரன் விசுக்கிரனை அனுப்பிவைத்தான்
துஷ்ட விசுக்கிரன் அக்கினிக்கோட்டையில் வந்து
சுற்றி உள்ளே போக மாட்டாதே
கெட்டவன் பாறையில் எட்டுத் தேவதையந்திரம்
கீறி ஏவினான் கேளும்—சோபனம் சோபனம் 121

யந்திரத்தில் சக்திகள்புத்தி மயங்கியே
எல்லாரும் ஸ்தம்பித்து இருந்தார்கள்
தண்டினி மந்திரிணி அம்பாளிடத்திற் சொல்ல
மாதாவுங் காமேசர் முகத்தைப் பார்த்தாள்
சக்தி கணபதி சுத்த லக்ஷணத்துடன்
திடுமென்று குதித்து வந்து யந்திரத்தை
குத்தித்தன் கொம்பாலே தூளாய்ப் பறக்க விட்ட
குஞ்சர முகருக்குச்—சோபனம் சோபனம் 122

காதாலேழுகோடி சேனைகளையும்
கணபதியுமப்போ உண்டாக்கி
அதிபதியாறு சேனாதி பதிகளையும் சிருஷ்டித்து
அந்த விசுக்கிரன் சேனைகளை
அடியோடு வதைத்து அவன் சேனாதிபதியாம்
யானை முகாஸுரனையும் வதைத்தார்
அம்பாள் வரங்கொடுத்தாள் கணபதிக்கப்போ
அனைவரும் பூஜிக்கச்—சோபனம் சோபனம் 123

## பண்டாஸுரன் தம்பிகள் இருவரின் வதை

சக்திகளுக்குமப்போ புத்தி தெளிந்தது
தமையன் முன் ஓடிப்போனான் விசுக்கிரன்
பித்தன் பண்டாசுரன் விசுக்கிர விஷங்கனை
பின்னுமனுப்பினான் ஜயிக்கச்சொல்லி
இருவரும் நாநூறு அக்ஷௌகிணி சேனையுடன்
எல்லா சேனாபதியுங் கூட்டிக் கொண்டு
ஆடம்பரமாய் அக்கினிகோட்டை வாசலில் வந்தார்
அந்தச் சக்திகளுக்குச்—சோபனம் சோபனம் 124

விஷங்கனோடெதிர்த்தாள் மந்திரிணியும் பொல்லா
விசுக்கிரனை எதிர்த்தாள் வராகி தேவி
அச்வாருடை முதலான பேரெதிர்த்தாள்
அந்த சேனைகள் க்ஷௌகிணிகளையும்
வஞ்சக விசுக்கிரன் பாண வருஷத்தால்
வாடி மெலிந்து சக்தி சேனைகளும்
அம்பாளின் சேனைகள் அஸ்திரத்தின் தாபத்தால்
அம்மனை வேண்டினார்—சோபனம் சோபனம் 125

மந்திரிணி உறையாலே வராகி சிந்துவை
சக்திகள் தாபந்தீர அழைத்தாள்
வந்து சொரிந்தது சுத்த கங்கா தீர்த்தம்
வாரணத்துதிக்கைபோல் இரண்டு ஜாமம்
வேண்டியமட்டும் குடித்தே சக்திகளெல்லாம்
வெகு தாகந்தீர்ந்து பலமடைந்து
தேகக்களைகள் தீர்ந்து சக்தி சேனைகளெல்லாம்
ஜயத்துடன் எதிர்த்தார்கள்—சோபனம் சோபனம் 126

வந்த அக்ஷௌகிணி தனில் ஒன்றரைப் பங்கையும்
மந்திரிணி வதைத்தாள் விஷங்கனையும்
சீறிக்கொண்டு வதைத்தாள் மற்றொன்றரைப்பங்கை
வாராகி வதைத்தாள் விசுக்ரனையும்
வந்து சேனைகளின் மற்ற ஒருபங்கையும்
மருண்டிட வதைத்தாள் அச்வாருடை
அறிந்துகொள் மூன்றுநாள் யுத்தமுடிந்ததினி
அம்மனுக்கே ஜயம் —சோபனம் சோபனம் 127

## பண்டாஸுரன் யுத்தத்திற்கு வருதல்

சேனாபதிகள் முதல் தம்பிகள் வரைக்கும்
செலவாய்ப் போனதைக்கேட்டு பண்டாஸுரன்
மானங் கெட்டவன் இன்னும் பின்னதி கோபமாய்
மஹேஸ்வரியை வைது திட்டிக் கொண்டு
கடித்துக் கொண்டான் பற்களையும் உதட்டையும்
கண்களிலே அனல் பொறி பறக்க
குடிலாக்ஷனைப்பார்த்து ஆக்கினை செய்கிறான்
கும்பக்குழந்தாய் கேள்—சோபனம் சோபனம் 128

கேளாய் குடிலாக்ஷா லலிதை யென்பாளொருத்தி
கேடு செய்தாள் நமக்கிளையவளோ.

வாளாலே லேசுலேசாகவே கொய்கிறோம்
வா விடுவாய் என்றன் சேனையெல்லாம்
முன்கோட்டை வாசலில்காக்குஞ் சேனையைத்தள்ளி
மிச்சம் மீதியாயுள்ள சேனையெல்லாம்
பெண்கள் தவிர மற்ற பேர்களும் புறப்பட்டார்
பெண்கொடி லலிதைக்கு—சோபனம் சோபனம் 129

கழுதை கட்டின தேர்கள் குதிரை கட்டின தேரும்
கடுவாய் கரடி சிம்மம் ஒட்டை முதல்
கழுதைக்கொடி கோழி காக்காய் பருந்துமுதல்
கரும்பன்றி செந்நாய்கள் பாம்புகளும்
பூதப்பிரேத வேதாள வாகனத்திலும்
பின்னும் அனேக வாகனங்களிலும்
விதவிதமாயாயுதங் கொண்டு வருகின்றான்
விச்வேச்வரிக்கு ஜயம்—சோபனம் சோபனம் 130

இரண்டாயிரத் திருநூற்றைம் பத்தஞ் சுக்ஷெளகினி
சேனைகள் தன்னை நடத்திக்கொண்டு
பண்டாஸுரனுந் தேரிலேறியே புறப்பட்டான்
அபசகுனங்கண்டான் அஸுரனங்கே
முன்பூமி நடுங்கிற்று ஆகாயத்திலிருந்து
முன்விழுந்தது ரத்தஞ் சோனையாக
கொம்பானைகளுடைய கொம்புகள் முறிந்தது
குலநாதைக்கே ஜயம்—சோபனம் சோபனம் 131

எந்த உற்பாதமும் எண்ணாமல் வருகிறான்
இலவம்பஞ்சு காற்றில் பறக்கின்றாப்போல்
பொல்லாத காலத்தால் பண்டாஸுரன் சேனை
புறப்பட்ட தம்மனை ஜயிக்கவென்றே
துஷ்டபண்டாஸுரன் வருவதைக் கண்டு
சூர்ய சந்திரன் ஏழு சமுத்திரமும்
அஸ்டதிக் கஜங்களும் அலறி நடுங்கிற்று
அம்மனுக்கே ஜயம்—சோபனம் சோபனம்

## லலிதாம்பிகையுடன் பண்டாஸுரன் யுத்தஞ் செய்தல்

இப்படி பண்டாஸுரன் வந்து சேனையை
ஏவினான் சத்தி சேனையை அடிக்க
அப்போ சக்திகள் கண்டு அதிகோபத்துடனே
அக்கினிக் கோட்டைக்கு வெளியில் வந்தாள்

மகாராஜராஜேஸ்வரி லலிதாம்பிகை
 வெம்பன் பண்டாஸுரன் வருகைகண்டு
ஓகோ இவனை வேறு வெல்வாரில்லை—என்று
 யுத்த முனையில் வந்தாள் —சோபனம் சோபனம் 133

அக்கினிக் கோட்டைக்கு வெளியில் வந்தாள்—ஸ்ரீ
 சக்கரத்தில் சுபசகுனமுங் கண்டாள்
ஒப்பற்ற அஸுரர்கள் தம்பட்டமுரசுகள்
 உக்கிரமாய் கொம்புகள் ஊதிக் கொண்டு
சக்திதேவிகளை அஸுரர்கள் எல்லாரும்
 சண்டை பிடித்தடிக்க துவக்கினார்கள்
சக்திதேவிகள் அப்போ அஸுரசேனைகளை
 சம்ஹரிக்கின்றார்கள்—சோபனம் சோபனம் 134

சுற்றிலுந் தேவிகள் அஸுரசேனைகளை
 சுற்றிப் பிடித்திழுந்துக் கத்தியாலே
குத்துகிறாள் சிலசக்தி சுட்டிகளாலே
 பொத்தென்று தலைவிழ வெட்டுகின்றாள்
செண்டு செண்டாய் யானை துண்டந்துண்டமாய் விழ
 கண்டங்கண்டமாய்க் குதிரைகள் விழ
மண்டைகளும் அஸுரர்கள் உடல்களும் உருளுது
 மஹாதேவிக்கே ஜயம் —சோபனம் சோபனம் 135

சக்திகள் அஸுரசேனைகளையெல்லாம்
 சம்ஹரிக்க யுத்த பூமியினில்
அஸுரர்கள் தேகத்தினின்றும் ரத்தவெள்ளம் பெருகி
 அலைமோதுங் காவேரி நதியைப்போல்
யுத்த பூமியினில் ரத்த ஆற்றங்கரை
 ஓடுது பிணங்களும் மிதந்துவர
சங்கையில்லா அஸுரர்களை வதைத்து
 சங்கரி ஜயங் கொண்டாள்—சோபனம் சோபனம் 133

ரத்தநதியினிருகரை தன்னிலுஞ் சாய்ந்து
 கிடக்கின்ற விருட்சங்களென்ன வென்றால்
தலைபோன அஸுரர்களின் தேகங்கள் எங்கிலும்
 தறிபட்ட கட்டைபோல் கிடக்கின்றன
அஸுரர்கள் நாடிகளும் முகத்துடன் கண்களும்
 அல்லிக் கொடியும் மலரும்போல
அஸுரர்கள் கொடைகளெல்லாம் தாமரைப்பூவைப்போல்
 (அந்) நதியினில் கிடக்குது—சோபனம் சோபனம் 137

யுத்த பூமியினில் ரத்தப்பிரிவாகம்
ஓடுவதைக்கண்டு தேவரெல்லாம்
சக்தி சேனையினால் அத்தனை யஸுராளும்
ஸம்ஹரிக்கப்பட்டுக் கிடப்பதையும்
அத்தனை யானை குதிரை சேனைகளெல்லாம்
ஆமைபோல் மிதக்க ரத்த நதியில்
சித்தம் மகிழ்ந்து பாரிஜாத புஷ்பங்கள்
தேவிக்குச் சொரிந்திட்டார்—சோபனம் சோபனம் 139

தேவர்களுஞ் சொர்ண புஸ்பமாரி சொரிந்து
திவ்ய சகுனங்களைக் காட்டினார்கள்
கோபத்துடனே பண்டாஸுரன் விழிசிவக்கவே
கொடூரமாய் உருட்டி விழித்துக் கொண்டு
தன் சேனை யஸுரார்களுக் கபஜெயத்தைக்கண்டு
தாய் லலிதா தேவியை எதிர்த்தான்
அஞ்சாமல் தேவியும் பண்டாஸுரனைப் பார்த்து
அதிக கோபம் கொண்டாள்—சோபனம் சோபனம் 139

கண்டகன் பண்டனைக் கண்டவுடன் தேவிக்கு
கண்களிரண்டும் அக்கினிபோல் சிவக்க
மண்டலம் புகழ்கின்ற சண்டப்ரகண்ட உத்
தண்டமான கோதண்டவில்லை
வட்டமாய் நாணாலே கட்டி இழுத்தாளம்மன்
முட்டி விட்டாளெங்கும் திடுக்கிடவே
துஷ்டனுமஸுரனைப் பொட்டென வதைக்கவே
திட்டமிட்டாள் மனதில் —சோபனம் சோபனம் 140

## பண்டாஸுரனால் ஏவப்பட்ட மாயா அஸுரர்களை அம்பிகையால் ஏவப்பட்ட மாயா சக்திகள் அழிந்தல்

தொடுத்தார் யுத்தத்திற்கு தெவியும் பண்டனும்
தொகையில்லா சரமாரிகளைச் சொரிந்தார்
இடைவிடாமல் சரங்களைச் சொரிந்தாளம்மன்
இதைக்கண்டு பண்டாசுரன் கோபமாய்
மாகையால் இருட்டைவிட்டான் அஸுரன் அதை
மாதாவும் சூரியாஸ்திரத்தால் போக்கினாள்
பெயன் குருடாஸ்திரம் விட்டான் அதையும்
போக்கிற்று நேத்திராஸ்திரம்—சோபனம் சோபனம் 141

வாயுவின் அஸ்திரத்தை பண்டாஸுரன் போட்டான்
பார்வதி வருணாஸ்திரத்தால் போக்கினாள்
ஓயாத வியாதிகளை அனுப்பி வைத்தான் பண்டன்
ஒன்று பத்து நூறு கோடியாக
அச்சுதானந்த கோவிந்த நாமத்ரய
அஸ்திரத்தை யம்மன் அனுப்பிவிட்டாள்
மிச்சமில்லாமலே வியாதிகளையந்த
அச்சுதர் போக்கினார்—சோபனம் சோபனம் 142

அந்தகாஸ்திரத்தை அனுப்பிவைத்தான் பண்டன்
அம்பிகை மிருத்யுஞ்ஜயனால் ஜயித்தாள்
மந்திரத்தால் சும்பநிசும்பன் சண்டமுண்டன்
மஹிஷாஸுரனையவன் அனுப்பிவைத்தான்
அனுப்பிவைத்தான் அதைக்கண்டு மஹேஸ்வரி
அட்டஹாஷம் செய்தாளதிலிருந்து
அம்மனட்டஹாஸத்தால் துர்க்காதேவி யுண்டாகி
அஸுரரை சம்ஹரித்தாள் சோபனம்—சோபனம் 143

முன்னாலே வேதங்களைத் திருடின சோமுகன்.
முதலான அஸுரரை அனுப்பிவைத்தான்
தன்னையடுத்தபேர்க்கு அபயம் கொடுத்து
தற்காக்கும் வலக்கை கட்டைவிரலை
உதறிவிட்டாள் அம்மன் அதிலேயிருந்து
உண்டாகி வந்த மச்சமூர்த்தியும்
வதைத்தந்த அஸுரரெல்லாரையுஞ் ஜயித்த
மச்சாவதாரர்க்குச்—சோபனம் சோபனம் 144

சமுத்திரத்தை வருத்திவிட்டான் பண்டன்
சக்திசேனைகளை முழுகடிக்க
நிமிஷத்தில் அம்மன் உதறினாளப்போது
நீட்டி ஆள்காட்டி விரல்தன்னையும்
குதித்தாருடனே யதிலேயிருந்து
கூர்மாவதார மாகாவிஷ்ணுவும்
கொந்தளிக்கும் சமுத்திரங்களெல்லாங் குடித்த
கூர்மாவதாரர்க்குச்—சோபனம் சோபனம் 145

இரணியாக்ஷனை அதிகோபத்துடனே
இந்தப்பண்டாஸுரன் அனுப்பிவைத்தான்
வராக மூர்த்தியும் உண்டானாரப்போ
வலக்கை நடுவிரலில் இருந்து

பொல்லாத ஹிரண்யாக்ஷ அஸுரர்களை எல்லாம்
சற்றுப்போதைக்குள்ளே ஸம்ஹரித்தார்
வெல்லமுடியாத ரூபந்தரித்த லக்ஷ்மி
வராகமூர்த்திக்குச் —சோபனம் சோபனம் 146

இரண்யகசிபு முதலஸுரானை எல்லாம்
இந்தப்பண்டாஸுரன் வருத்தி விட்டான்
பரமேச்சுவரியும் வலக்கைப் பவித்திர
விரலையசைத்தாள் அதிலிருந்து
அதிக பராக்கிரம நரசிம்மரும் வந்து
அஸுர ஹிரணயனை ஸம்ஹரித்தார்
நாகசயனர் பக்தர் பிரகலாதர் லக்ஷ்மி
நரசிம்ம மூர்த்திக்குச்—சோபனம் சோபனம் 147

மஹாபலி முதலான அஸுரசேனைகளை
வருந்திப் போகச்சொன்னான் பண்டாஸுரன்
மகமாயையும் வலக்கைச் சுண்டுவிரலை
சுழட்டியே உதறினள் அதிலிருந்து
வந்தார் மகாவிஷ்ணு வாமனமூர்த்தியாய்
மாபலி அஸுரனையும் ஜயித்து
மாபலியை ஜயித்துப் பாதாளத்தில் தள்ளின
வாமனமூர்த்திக்கும்—சோபனம் சோபனம் 148

கார்த்த வீரியார்ச்சுனனைச் சேனைகளுடனே
கண்டகன் பண்டன் அனுப்பிவைத்தான்
ஆர்த்திகளைப் போக்கும் லலிதேச்வரியும்
அசைத்தாள் இடக்கைக் கட்டைவிரலை
பரசுராமர் கையிற்கோடாலி கொண்டு
புறப்பட்டார் வெள்ளிமலையைப்போல்
பலமுள்ள கார்த்தவீரியார்ச்சுனனை வதைத்த
பரசுராமருக்குச்—சோபனம் சோபனம் 149

இராவணனை கும்பகர்ணனிந்திர ஜித்தனை
இராக்ஷதாளை யவன் அனுப்பி வைத்தான்
தேவியும் இடக்கையின் ஆள்காட்டி விரலை
செப்பிடு வித்தைபோல் உதறினளே
ஸ்ரீராமலக்ஷ்மணர் ரதத்திலிருந்து கொண்டு
ராவணன் முததுலாரை வதைகள் செய்தார்
தாமஸியாமல் ராக்ஷதாளை வதைத்த
ஸ்ரீ ராமலக்ஷ்மணருக்குச்—சோபனம் சோபனம் 150

வானரங்களையும் வருத்திவிட்டான் பண்டன்
மலைமலையாகவே தேவிமேலே
விஜய அம்பாள் இடக்கை தடுவிரலை
மின்னல் மின்னிஞல்போல் உதறலேளே
பரமத்திரரும் வந்தார் கைலாச மலைபோல
பெரிய உலக்கை கலப்பை கொண்டு
உலக்கை கலப்பையால் குரங்குகளைக் கொன்ற
உக்கிரபாலகருக்குச்—சோபனம் சோபனம் 151

சிசுபாலன் கம்பன் சகடன் பூதன் தன்னை
துஷ்டன் பண்டாஸுரன் அனுப்பிவைத்தான்
விச்வேஸ்வரியும் இடக்கைப் பவித்திர
விரலை அசைத்தாள் அதிலிருந்து
சங்கர்ஷணனன் ப்ரத்யும்னன் அநிருத்தனுசவே
ஸ்வாமி வந்தவர்களை ஸம்ஹரித்தார்
சங்கர்ஷணன் ஸ்ரீகிருஷ்ணன் அநிருத்தன் ப்ரத்யும்னன்
ஸ்வாமி நாலுபேருக்கும்—சோபனம் சோபனம் 152

கலியுகாஸ்திரத்திலே கலக்கு மிலேச்சரைக்
கண்டகன் புண்டன் இனுப்பி வைத்தான்
ஒலியாணியும் இடக்கைள சுண்டு விரலைச்
காட்டியசைத்தாள் அதிலிருந்து
அட்டஹாசத்துடன் கல்கி அவதாரமாய்
அச்சுதரும் வாதார் அந்தக்ஷணம்
முரட்டுத்தனமுள்ள மிலேச்சரை வதைசெய்ய
முரஹரி கல்கிக்கு—சோபனம் 159

பின்னும் அநேகம் மோகனுஷ்திரந்தன்னை
பூட்டிவிட்டான் சக்தி சேனையின் மேல்
அந்நேரம் அம்மனும் சாம்பவர் அஸ்திரத்தால்
அதையும் வுமோசனம் செய்துவிட்டாள்
அக்ஷெளகினி சேனையை நாருயணுஸ்திரத்தால்
பஸ்மமயமாக ஆக்கிவிட்டாள்
துஷ்டன் குடிலாக்ஷன் முதற் சேனுதிபதிகளை
சிதைத்தாள் பாசுபதத்தால்—சோபனம் சோபனம் 154

பின்னும் அனேகம் அஸ்திரத்தாலவன்
அக்ஷெளகினிசேனை போன பின்பு

என்ன பலம் லலிதா தேவிக்கு என்று
ஏங்கி விழிகின்றான் பண்டாஸுரன்
அம்மனுந் தம்முடைய நாதர் காமேசரை
அந்தரங்கத்திலேதான் நினைந்து
காமேசர் அஸ்திரத்தால் ஜயம் வரட்டுமென்று
கணவரை வேண்டினாள்—சோபனம் சோபனம் 155

கண்டகன் பண்டாஸுரனை வதைக்கவென்றே
காமேசரும் அஸ்திரங் கொடுத்தார்
வாங்கிக்கொண்டு அம்மன் காமேசர் அஸ்திரத்தை
மண்டலா ஹாரமாய் வில்வளைத்து
கோடி சூரியன் போன்ற காமேசர் பாணத்தைக்
கோதண்டத்தில் வைத்து மந்திரித்து
வேடிக்கையாகவே காதுபரியந்தம்
விசையாய் இழுத்து விட்டாள்-சோபனம் சோபனம் 156

தேவி பிரயோகித்த அஸ்திரந் தானப்போ
தேவேந்திரன் வஜ்ஜிராயுதத்தடிபோல்
தாவிப்பண்டாஸுரன் மார்பிலே பாய்ந்தது
தரணியிலே விழுந்து உயிரை விட்டான்
அஸ்திர முடையாளின் அக்கினி ஜ்வாலையாலே
அவனுடபுரங்களும் வெண்ணீராச்சு
அஸ்தமனத்தில் பண்டாஸுரனை வதைத்து
அம்மன் ஜயங் கொண்டாள்—சோபனம் சோபனம் 157

புஷ்பம் பன்னீர்களைச் சொரியவே தேவர்கள்
புகழ்ந்து சகிகள் வெண்சாமரை
அப்பொழுது தேவி சக்தி சேனையுடன்
ஆலயத்தை அம்மன் வந்தடைந்தாள்
ஆயுதங்களால் அடிப்பட்ட சக்திகள்
காயத்தை அம்ருதகண்ணால் போக்கினாள்
நோய்கள் போனதுபோல சுகம்பெற்றார் பூமியும்
புனிதமாய் செழித்தது—சோபனம் சோபனம் 158

மும்மூர்த்திகள் முதல்முப்பத்து முக்கோடி
தேவர்கள் முனிவர்கள் பிரம்மணரும்
அம்மனை வந்து அடிபணிந்து கொண்டு
அற்புதமான ஸ்துதிகள் செய்தார்
அமராளும் மன்மத தேவி ரதியைக் காட்டி
அறிவித்தார் மதனனை எழுப்பவென்றே

அம்மாத்திரந் தயவுசெய்ய வேண்டுமம்மா
எங்களுக்காய் வேண்டிச்—சோபனம் சோபனம் 159

இந்த ரதியுடையகணவன் மன்மதனை
எழுப்பித் தந்து எங்கள் மனங்குளிர
எவ்விதமாவது தயவுசெய்து ஈசரும்
ஈஸ்வரியைக் கூடி சுப்ரமணியர்
பிறந்து தாருகன் முதல் அஸுரர்களை வதைத்தால்
பிறகு சங்கடமில்லை எங்களுக்கு
கூடியே தேவர்கள் எல்லாருங்கைகளை
கும்பிட்டு நின்றார்கள்—சோபனம் சோபனம் 160

கண்டவுடனே ரதி தேவியை அம்மன்
காமேசர் முகத்தை ஆதரவாய்ப் பார்த்தாள்
உண்டாய் விட்டான் மதன் வஜ்ஜிரதேகத்துடன்
உடனே தாயாரை நமஸ்கரித்தான்
அனுக்ரஹித்தாள்தேவி மன்மதனுக்கு
ஆருமினியவனை ஜயிக்கமாட்டாளென்று
வானவரும் இனி ஜயிக்கமாட்டாளென்று
வரமுங் கொடுத்துச் சொல்வாள்-சோபனம் சோபனம்

குழந்தாய் உனக்குப் பயமில்லை இனிமேல்
கூட்டிவை பார்வதியுடன் ஈசரை
தழுதழுத்துன்னுட பாணத்தால் சங்கரர்
தானே விவாகஞ் செய்வார் பார்வதியை
ஒருவர் கண்ணுக்கும் இனி அகப்படமாட்டாய்
உன்னைத் தூசித்த பேர் அண்ணு கள்ளர்
சற்றும் பயமில்லை நாமிருக்கின்றோமென்று
சங்கரியனுப்பினாள்—சோபனம் சோபனம் 162

## குமாரமூர்த்தி அவதாரமாகி தாருகன் முதலிய அஸுரரை வதைத்தல்.

அம்மன் அனுக்ஞையால் மதனன் பூச்சரத்தாலே
அடித்தான் பார்வதிதேவி பரமேசரை
வந்து விவாகம் செய்து ரமித்தார் பரமசிவன்
குமாரரும் உண்டானார் சிவனிடத்தில்
கொன்று தாருகன் முதல் அஸுரரை வதைத்த
கோலவேலருக்குச்—சோபனம் சோபனம்
தேவ சேனாதிபதி தெய்வானையை மணந்து
ஸ்ரீபுரந்தனனில் வந்தார்—சோபனம் சோபனம் 163

## லலிதாம்பிகையின் ஸ்ரீபுர வர்ணனை

ஸ்ரீபுரமென்றதைக் கேட்டதும் அகஸ்தியர்
தவமுனி ஹயக்ரீவரைப் பார்த்து
ஸ்ரீபுரமென்பதை விஸ்தாரமாக
சொல்லவேண்டும் தயவாக வென்றார்
அன்புடன் வார்த்தையைக் கேட்டு ஹயக்ரீவர்
அகஸ்திய முனிவரைப் பார்த்துரைப்பார்
இன்பங்களுண்டாகத் தேவியின் நகரத்தை
இனி சொல்வோம் கேளென்றார்—சோபனம் சோபனம

பண்டாஸுரனை வதைத்த சந்தோஷத்தால்
பரமேச்வரிக்கும் காமேசருக் தம்
தேவசேனாபதியும் தேவர்களும்கூடி
ஸ்ரீலலிதாம்பாள் கொலுவிருக்க
ஐச்வரியாளுக்கு சிந்தாமணிக் கிரஹம்
விச்வகர்மாவை அமைக்கச் சொன்னார்
மகிழ்ந்து விச்வகர்மா இவர்கள் சொன்னபடிக்கு
புகழ்பெறவே செய்தார்—சோபனம் சோபனம் 165

## ஸ்ரீபுரத்தின் விவரம்

தரணில் ஒன்பது சமுத்திரத்தில் ஏழும்
தெக்குப் பதினாறு ஸ்ரீபுரங்கள்
மேருகிரியிலொரு ஸ்ரீபுரமுண்டதை
முன்னாலே உமக்கு நான் சொல்லுகிறேன்
மூவராலும் உநக்கு நான் சொல்லிகிறேன்
முடியாது அம்மன் புரமகிமை
சாவதானமாகக் கேட்க வேண்டுமிதை
தன்யனே சொல்லுவேன்—சோபனம் சோபனம் 166

ஒன்றுவது கோட்டை இரும்பாக்குமதற்கு
உயரம் நானூறு யோசனைகள் உண்டு
நன்றாக நூறு யோசனைகள் அகலங்காண
நான்கு புரத்திலும் வாசலுண்டு
வாசல்கள் தோறும் கோபுரமுண்டு அதற்கு
வரியாக தட்டுகள் இருப்பத்தைந்து
யோசனைக்கு ஒரு தட்டு வீதங்கணக்கு
உச்சி மகுடம் மூன்று—சோபனம் சோபனம் 167

இந்த வாசல் போலே நாலு வாசலுக்கும்
இதுபோலே கோபுரந்தட்டு மூண்டு
இந்தக் கோட்டை வாசல் கதவு கோபுரமுதல்
எல்லாம் இரும்புப்பணி இதைப்போல
எந்தக்கோட்டைகளினி சொல்லப்போகின்றேமோ
அந்தக்கோட்டையும் இதுபோலகஸ்தியா
இந்தக்கோட்டை கழிந்தப்புற முள்ளது
ஏழுயோஜனையுண்டு—சோபனம் சோபனம் 168

ஏழுயோஜனையுள்ள நடு இடைவழிதன்னில்
எல்லா மரங்களும் நிறைந்திருக்கும்
தோழர்களே ஏழுயோஜனையின் விஸ்தாரம்
சொல்லப்போகிறேம் கோட்டை இடை நடுவில்
காளியுங் காளரும் சக்தியுடனே
காலசக்ராசனத்தில் இருந்து
லலிதையுடைய நாமஞ்ஜெபித்து ஒன்றுங்கோட்டை
ரக்ஷிக்கிருள் என்னும்—சோபனம் சோபனம் 169

வெங்கலக் கோட்டையில் வஸந்தருதுக்காவல்
வேலியும் கற்பக விருக்ஷமாகும்
தங்கச் செம்புக் கோட்டையில் வேலி ஹரிசந்தனம்
சுசியான கிரீஷ்மருதுக்காவல்
சுயக்கோட்டையின் வேலி சந்தன விருக்ஷங்கள்
எங்குஞ் சுற்றிக்காவல் வருஷருது
முன்னுவிரும்புக் கோட்டையின் வேலிமந்தாரை
வெளுத்த சரத்ருதுகாவல்—சோபனம் சோபனம் 170

பஞ்சலோகக்கோட்டைக்குப் பாரிஜாதம்வேலி
ஹேமந்தருதுகாவல் காததூரம்
பஞ்சப்பொன் கோட்டைக்கும் மந்திரிணி முதலான
சக்திகள் கிரகம் சசிருதுக்காவல்
பிக்ஷுராகத்துக்குச் சித்தர்களும் முத்திப்
பெண்களுங்கூடி இருக்கின்றூர்கள்
பிக்ஷுராகம் கழிந்தப்புறஞ் சாரணர்
பத்மராகக்கிரகம்—சோபனம் சோபனம் 171

அழகிய கந்தர்வாள் வைரக்கிரகந் தன்னில்
அதற்குப்பின் யோகிகள் வஜ்ஜிரக்கிரகம்
புதுநாகரத்னமும் வைடூரியத்தாலும்
பின்னீந்திரக் கல்லாலுமுள்ள கிரகம்

முத்துக்கள் சூழும் மரகதத்தால் கிரகம்
மின்போல் வராகிக்கும் நாலுகிரகம்
சுத்தமான கிரகம் பிரம்மாவினுடையது
செம்பவழத்தாலே—சோபனம் சோபனம் 172

மாணிக்க மண்டபத்தில் விஷ்ணுவும் இருக்கின்றார்
மண்டபத்தினிடையில் யிவலோகம்
பிரம்மதேவருடைய சத்தியலோகமும்
பிரபலமான விஷ்ணுவின் உலகம்
மாயக்கோட்டை அனந்தம் வர்ணமுள்ள கோட்டை
அதற்கிடையில் சூரியனின் விமானம்
பகவான் மார்த்தாண்டவர் வைரவர் இருப்பு
பக்தரே கேளின்னுஞ்—சோபனம் சோபனம் 173

சந்திர பிம்பத்தில் சிங்காரமாகவே
சரியாக இருபத்தஞ்சு கோட்டையும்
சுந்தரமான கோபுரங்களும் நூறுண்டு
தொகையொரு கோட்டைக்கு நான்குவீதம்
அப்புறம்தாமரைப் புஷ்பங்களின் வனம்
ஆறுயோசனைக்கு நிறைந்திருக்கும்
விப்ரனே அதற்குக் கிழக்காகவே யெங்கும்
சுற்றிக்கதம்பவனம்—சோபனம் சோபனம் 174

அதற்கு கிழக்கிலே மும்மூர்த்திகளுக்கும்
அகங்கள் மூன்றுபத்ம அடவியிலே
இதற்கு நடுவில் சிந்தாமணி ரத்தினத்தால்
ஈஸ்வரி லலிதா தேவியின் கிரகம்
நாலுபுறம் வாசல் உண்டதற்குச்சியில்
ஞானரத்தினத்தாலே மகுடம்
வலதுபுறத்திலே மந்திரிணியின் கிரகம்
வாராகிக் கிடப்புறம்—சோபனம் சோபனம் 175

அக்கினி முடுக்கிலே அக்கினி குண்டம்
அதற்குமேலே நிற்கும் ஸ்ரீ சக்ரத்தேர்
நிற்கின்றது வாயுமுடுக்கில் மந்திரிணிதோ
நேரே ஈசான்யத்தில் வாராகிதேர்
இந்த நடுவிலே சக்திகளின் கிரகம்
சிந்தாமணி கிரகத்தைச் சுற்றிலும்
சிந்தாமணிக்கிரகம் சிந்தாமணிச்சுவர்
சுற்றிலும் தீபங்கள்—சோபனம் சோபனம் 176

சிந்தாமணி கிரகத்தின் நடுமத்தியில்
சிந்தாமணியாலே ஸ்ரீ பீடம்
அஷ்டகோணவடி வாகி விளங்கிய
சக்ர ராஜாவென்ற பீடத்தின்மேல்
ஐம்மூன்று தட்டந்த ஸ்ரீ பிடத்திற்கு
ஆயிரத்தறுநூறு முழம் வீதி
கைமுழத்திற்கிருபது முழம் உயரம் தட்டு
கடலைக் குடித்தவகஸ்தியா—சோபனம்சோபனம் 177

தட்டுத்தோறும் இதுபோல் உயரம் வீதி
தட்டுத் தோறுஞ் சக்திகள் இருக்காள்
திட்டமாய் ஸ்ரீ பீடத்திற் கப்புறத்திலே
சிங்காரப்படி முப்பத்தாறு ஸ்தம்பம்
வட்டமான இந்த பீடத்தில் ஈசர் பிரம்மா
மாலவர் ருத்திரர் கட்டிலின் கால்
கட்டிற் பலகை சிவன் சதாசிவன்பாய்
ஈசானன் தலையணை—சோபனம் சோபனம் 178

மஞ்சத்தின்மேல் அம்சதூளிகா மெத்தையும்
வட்ட இருபுரந்தலையணையும்
மஞ்சத்தின்மேலே கிழக்கே பார்த்திருக்கின்றார்
மன்மதகோடி போல் காமேசரு ம
நாதர்காமேசர் மடிமேல் கிழக்கைப்பார்த்து
தாய் லலிதா தேவியும் இருக்காள்
பாலா லலிதாதேவிக்கு நித்தியம்
பதினாறு வயதென்றும்—சோபனம் சோபனம் 179

இடதுதுடைமேல் சுவாமி வைத்துக்கொண்டம்மனை
வலது கன்னத்தை முத்தமிட்டுக்கொண்டு
விடைமேல் அழகரும் வளமுடன் தேவிக்கு
விபூதியிட்டு திருஷ்டி கழித்து
அஞ்சாதீர் என பக்தர்க்கபயப் பிரதானஞ்செய்து
அம்பிகையுடன் தாம்பூலந்தரித்து
இந்தப்படி ஈசன் சிந்தாமணிக்கிரகத்தில்
இருந்தார் தேவியுடன்—சோபனம் சோபனம் 180

தேவிக்கு உயர நாற்பது முழத்திற்குமேல்
தேசத்தில் ஒப்பில்லா மேல்கட்டிலில்

யமுனைகைஹாரயச் சுற்றியிருக்கின்றுள்
இஜ்ஜகத்தை மோகிப்பிக்கும் மாயை
தேவியுடைய சௌபாக்கியத்திற்கொப்பில்லை
தேவிதானறிய வேணும கஸ்தியா
நாவாலும் மனதாலும் எண்ணமுடியாது
ராஜேஸ்வரி மகிமை—சோபனம் சோபனம் 181

## தேவியின் ஸ்ரீவித்தை ஜபத்தின் மகிமை உரைத்தல்

மந்திரங்களுக்கெல்லாம் பெரிதான ஸ்ரீவித்தை
மகாகுருவினிடத்தில் வேண்டிக்கொண்டு
மந்திரத்திற்குச் சொன்ன ஜபஹோமங்கள் செய்து
மகிமை தேவாளுக்குப் போஜனமளித்து
பின்னர் தேவியை பரமாத்மாவாய் தியானித்து
பிறகு நிஷ்காம்ய ஜபம் செய்த பேர்க்கு
எண்ணிய காரியம் கைகூடும் ஜகத்திலே
இவர்கள் எங்கும் பூஜ்யர்—சோபனம் சோபனம் 182

அசுத்தத்துடன் சோபனத்தைச் சொன்னபேர்க்கும்
அசங்கித்தபேர்க்கும் பிணிகளுண்டு
அசுத்தமில்லாமலும் அசங்கையில்லாமலும்
அம்மன் சோபனமென்றும் பக்தியுடன்
விஸ்வாஸமாய்ச் சொன்னபேர்க்கும் கேட்டவர்க்கும்
வியாதியில்லை சத்ருபாதையில்லை
நிஜமாய் ஜ்வரம் வியாதி ரோகாதிகளில்லை
நித்யசம்பத்துண்டு—சோபனம் சோபனம் 183

இந்தச் சோபனம் பாடும் வாழ்வரசிகள் எல்லாம்
தேவிகளென்று மனதிலெண்ணி
சந்தனந்தாம்பூலம் குங்குமம் பழம் புஷ்பம்
சந்தோஷமாய் எல்லார்க்குங்கொடுத்து
எந்தெந்த கிரகங்களில் சொல்லவைத்துக் கேட்பாரோ
அந்தந்த கிரகங்களில் அரிஷ்டம் நீங்கும்
சுந்தரி கிருபையாலே சந்ததி விருத்திக்கு
தீர்க்காயுஸ*முண்டு சோபனம் சோபனம் 184

## தேவியை பூஜிக்கவேண்டிய முக்கிய காலங்கள்

அன்பாய் நவராத்திரி பௌர்ணமி சுங்கிர வாரம்
அம்மன் சோபனந்தன்னைசொன்னபேர்க்கு

*இது குண்டலி சக்தி அதாவது உடலைப் பாம்பு போல் மூன்றரைச் சுற்றாய் வளர்த்துக் கொண்டிருப்பவள்.

துன்பங்கள் உண்டாகமாட்டாது ஒருக்காலும்
தென் திசையை யடையார் தினஞ்சொன்னவாள்
ரொம்பச் சொல்லுவானேன் தேவிதாசாளுக்கு
திரிலோகமும் அவர்கட்கு ஜயம்
நம்பினபேர்களை காத்திட தேவியல்லார்
நாட்டிலே வேறுண்டோ—சோபனம் சோபனம் 185

அத்திரி மகரிஷி ஆசிரமத்தில் அநுசூயை
கேட்ட இஞ்ஞான ரகஸியத்தை
நல்துரையில்வாழும் லக்ஷ்மிகடாக்ஷத்தால்
நாராயணனுரைத்த தேவி மகிமை
ராஜேஸ்வரியால் மகிமை யகஸ்தியரும்
ஆதரவாய்ச் சொல்லச் சொன்னதற்கு
நாடுசெழிக்க அவதரித்துவந்த
மாதவர் அறிவித்தார்—சோபனம் சோபனம் 186

அறிந்தறியாமல் இந்தச்சோபனத்தில்
அர்த்த அக்ஷரம்பிழை இருந்தாலும்
மகப்பிரபுமனுஷப்பிரபு விஷ்ணு என்பது போலும்
மராமரா என்றதோர் நாமம்போலும்
வரதசிவனுர் சிவசங்கர நாமம் போலும்
வார்த்தைப் பிழைகள் தன்னைப்பொறுத்து
எதுவிதத்திலும் பரதேவியைத் தியானித்தால்
ஏழைக்கிரங்குவள்—சோபனம் சொபனம் 187

## மங்கள வாழ்த்து

ஜயமங்களம் லலிதாதேவிக்கும்
ஜயமங்களம் காமேச்வரருக்கும்
ஜயமங்களம் மந்திரிணி தண்டநாதைக்கும்
ஜயமங்களம் ஸர்வசக்திகட்கும்
ஜயமங்களம் ஹயக்ரீவருக்கும்
ஜயமங்களம் அகஸ்தியமாமுனிக்கும்
ஜயமங்களம் ஸர்வஜனங்கட்கும் நமக்கும்
ஜயமங்களம் நித்திய சுபமங்களம்.

## சோபனம் முற்றுப்பெற்றது

ஓம்—தத்—ஸத்—பிரம்மார்ப்பிதமஸ்து
ஓம்—தேவ்யை நம:

உ
பரதேவி துணை

# தேவி பாடம்

## கடவுள் வணக்கம்

கொப்பியளோ பஞ்சநதீசா
கொப்பியளோ பரணதார்த்தீசா
கொப்பியளோ ஜய தர்மஸமவர்த்தினி
கொப்பிபாடுவோம் ஜய கொப்பியளோ

( என்ற பல்லவிக்குச் சில பாகங்களை சந்தமாகப் பாடலாம் )

மிருகண்டுரிஷி பிள்ளை மார்க்கண்டேய முனி
யாகம் பண்ணுகின்ற காலத்தினில்
மார்க்கண்டேயர் ஜய முனிவருக்குச் சொன்ன
மகாதேவியுடைய மகிமையெல்லாம் 1

வியாசமுனி பரீக்ஷித்துக்குச் சொன்ன
விச்வேச்சிரி மகிமை எல்லாம்
ஸூதமுனி சவுனகாதிகட்குச் சொன்ன
ஸ்ரீ தேவியின் மகிமை தன்னில் 2

அறிந்தமட்டுக்கும் நானுரைப்பேனிதில்
அக்ஷரப் பிழைகள் வராமல்
சேஷாத்திரி குருவை பணிந்தே மஹா
தேவிமகிமை சொல்லத்துணிந்தேன் 3

சரஸ்வதியும் கணேசரும் எந்தனுக்குத்
தந்தேன் பாக்கியம் என்று சொல்ல
சந்தோஷமான ஜயத்துடனே
ஸர்வேச்வரி மகிமை யுரைப்பேன் 4

## கதை வரலாறு

சுரதனென்ற ஓரரசன் தன்னுட
ஜகத்தை எல்லா மாண்டிருந்தான்
தர்மாதர்மத்தை ஆராய்ந்து நல்ல
சாஸ்திரப்படிக்கு ஆண்டிருந்தான் 5

அஸூயை யினாலொரு பகையரசன்
அவனை அடித்துத் துரத்திவிட்டான்
அதிசோகத்துடன் ராஜாவும் ஒரு
அடவிதனில் வந்து சஞ்சரித்தான் 6

சமாதி என்கிற வைசிய னொருத்தன்
புத்திரருடன் விரோதப்பட்டு
பொறுக்கமாட்டாது கோமுட்டியும்
புறப்பட்டு வந்தான் வனத்தை நோக்கி 7

கோமுட்டியைக் கண்டு ராஜனுமப்போ
குசலப்ரச்னம் கேட்டிடவே
அன்புடையாளுமென் புத்திராளும் மஹா
அவமானந்தனைப்பண்ணினார்கள் 8

சகிக்கமாட்டாதே நானுமிப்போதிந்தத்
தவவனந்தினில் வந்தேனென்றான்
அவன் சொல்லிவந்த வார்த்தைகளைக் கேட்டு
ஆச்சரியப்பட்டு ராஜனப்போ 9

என்னுடைய வர்த்தமானந்தன்னை
எடுத்துரைப்பேன் நீர்கேளும்
சத்துருவால் ஒரு ராஜன் வந்து என்னை
சண்டைபண்ணி ஜயித்துவிட்டான் 10

பாரியையுடனே புத்திராளையுமென்
பட்டிணந் தன்னையும் நானிழந்தேன்
பந்து ஜனங்கள் தனையிழந்து இந்த
வேடர்வனத்தில் வந்தேனென்று 11

சொல்லிக்கொண்டு இருவருமாய்
சுமேதஸ் முனியைக்கண்டு பணிந்தாள்
திடபுத்தியாய் இருக்கும்பொழுதிந்த
சோகம்வந்து மறைப்பானேன் 12

ஞானஸ்வருபியே சொல்லுமென்று கேட்க
ராஜாவைப்பார்த்து முனியுஞ் சொல்வார்
பள்ளுப்பறை பதினெட்டுசாதிகட்கும்
ஈ எறும்பு எண்பத்தி நான்கினுக்கும் 13

எனது நானென்ற அபிமானம் ஜீவர்
எல்லாரிடமும் இருக்கின்றது
அகங்காரம் பூர்ணமாயிருக்கும்போது
அகம்பிருமம் நானென்கின்றீரே 14

அஞ்ஞானமாயா மயக்கம் விலக்கிட
ஹரி ப்ரம்மாவாலும் கூடாது

அண்டம்பதினாலுலகம் முழுவதும்
அம்மன் மாய்கையினால் விளங்கும் 15
ஸ்ரீதேவி ஜகன் மாதாவினுடைய
திருஷ்டியினாலே விளங்கி நிற்கும்
ஸ்ரீ தேவி மாயையல்லா மென்றந்தச்
சுமேதஸ்முனியு முரைத்திடவே 16
தேவியாரோ தெரியவில்லை என்று
திரும்பவும் ராஜன் கேட்கலுமே
ஸ்ரீதேவிமகிமை தன்னையப்போ
சுமேதஸ்முனியு முரைக்கலுற்றார் 17

## மதுகைடவர் விருத்தம்

திருப்பாற்கடல் தன்னில் ஸ்ரீஹரியும்
சேஷசயனத்தில் பள்ளி கொண்டார்
மகாவிஷ்ணுவின் கர்ணங்களிலிருந்து
மதுகைடவர் இருவர் உண்டானார் 18

விழித்துப் பார்த்தங்கே பிரம்மாவை யவர்கள்
முஷ்டியுத்தம் பண்ண வந்தெதிர்த்தார்
அயனுங்கண்டு பயந்துகொண்டு ஸ்ரீ
ஹரியை வந்து நமஸ்கரித்தார் 19

நினைவுதெரியாது விஷ்ணுவுமப்போ
நித்திரையில் வசப்பட்டிருந்தார்
அம்மா தேவி நித்திராமோஹினியே பொல்லா
அஷுராள் பயத்தால் அயனிடம் வந்தேன் 20

மோகினியே ஜகன்மாதாவே மஹா
விஷ்ணுவைவிட்டு வெளியேறம்மா
(என்று). லோகமோஹினி மகிமைதனைச் சொல்லி
நாலுமுகவரும் ஸ்தோத்திரிக்க 21

பகவானுடைய சரீரந்தனை விட்டு (தேவி)
பிரத்யக்ஷமாக எதிரில் வந்து
வேண்டும் வரத்தைக்கொடுத்து பிரம்மாவுக்கு
விச்வமோகினியும் மறைத்தாள் 22

மகாவிஷ்ணுவும் எதிர்நின்ற பிரம்மாவை
வந்த காரியங் கேட்கலுற்றார்

(நீர்) யோக நித்திரை பண்ணுகின்றபோது
உம்முடைய கர்ணங்களிலிருந்து 23

மதுகைடவர் என்றிரண்டு பொல்லாத
மஹா அஸுரர்கள் உண்டானார்
அந்த அஸுரரைக்கொல்ல வேணுமென்று
ஹரியைப்பிரம்மன் நமஸ்கரித்தார் 24

ஆகட்டுமப்படியே சம்ஹரிப்போமென்று
அனுப்பிவைத்தார் பிரம்மாவை
மகாவிஷ்ணுவுடன் யுத்தம் பண்ணப் பொல்லா
மதுகைடவர் வந்தெதித்தார் 25

ஹரியுடனே அஸுரர்களிருவரும்
அநேகங்காலம் யுத்தஞ்செய்தும்
ஹரியும் ஜயிக்கமுடியாமல் அந்த
அஸுரரைப்பார்த்து சந்தோஷமாய் 26

அஸுரர்களே உங்களுக்கு எம்மால்
ஆனவரத்தை தருவோமென்றார்
ஆனவரத்தை தருவோமென்றவுடன்
அஸுரரும் அதிகோபத்துடன் 27

விஷ்ணுவைப்பார்த்தவாள் கர்வத்துடன் உமக்கு
வேண்டும் வரத்தை நாம் தருவோமென்றார்
உங்களிருவரையும் சம்ஹரித்திட
ஒருவரமெனக்கு வேண்டுமென்றார் 28

வஞ்சித்தார் நம்மை மஹாவிஷ்ணுவுமிப்போ
வார்த்தை இரண்டு சொல்லலாகாதென்று
சரிக்குச்சரி நாமும் ஆகவேணுமென்று
சக்கரத்தாருடன் ஏது சொல்வாள் 29

அப்பு இல்லாத ஸ்தலந்தனில் எங்களை
பிருதிவியில் வைத்துக் கொல்லுமென்றார்
தன்னுடைய தொடைதனில் வைத்துமே
சம்ஹரித்தாரப்போ அஸுரர்களை 30

அஸுரருடைய தேசங்கள் தானிப்போ
அவனியாக இதோ விளங்குவது
ராஜேஸ்வரி மகிமைகள் தான்சொல்ல
நான்முகராலும் முடியாது 31

## மகிஷாஸுரன் விருத்தம்

மகிஷாஸுரன் என்னும் ஒருத்தன்
தபஸுமிகப்பண்ணி வரமடைந்தான்
ஜகத்திலுள்ளோரை உபத்திரவிக்க அஸுரன்
தேவர்கள் ரிஷிகளெல்லோருங்கூடி 32

கைலாலசத்திற்கு ஓடிவந்தெல்லோரும்
அறிவித்தாள் மஹாதேவருக்கும்
சிவனுடைய சந்நிதியில் நின்று
தேவிமகிமை சொல்லி ஸ்துதித்தாள் 33

தேவாளுடைய முகத்திலிருந்தம்மன்
தேஜோருபமாய் ஒன்று சேர்ந்து
அத்தனைபேர்களின் தேஜஸைக்கிரகித்து
அம்மன் பிரத்தியக்ஷமாக வந்தாள் 34

அத்தனை தேவர்களும் பணிந்து தங்கள்
ஆயுதமும் தேவி கைக்கொடுத்தாள்
பக்தியாய் ஆயுதமுங்கொடுக்க அம்மன்
பதினெட்டுக்கையிலுந் தரித்துக்கொண்டு 35

சிம்ஹவாகனத்தில் ஏறிக்கொண்டாள் மஹா
தேவியும் யுத்தம் பண்ணவந்தாள்
மஹிஷாஸுரனும் தேவியுமாய் மஹா
ஆங்காரமாய் யுத்தம் பண்ணலுற்றார் 36

அநேககாலம் மகிஷன் தேவியுடன்
அஞ்சாமலே யுத்தம்செய்து நின்றான்
மங்கையினால் பலரூபமெடுத்தவன்
மகாதேவியுடன் யுத்தம் செய்தான் 37

காளிரூபமெடுத்துக்கொண்டு தேவி
கைதனில் சக்ராயுதமுங் கொண்டு
மஹிஷரூபமெடுக்கும் போதவனை
மடியவெட்டினாள் மாதேவியும் 38

காமாக்ஷிதேவியும் சந்தோஷமாயந்தக்
காளிகாதேவியைக் கண்டுகந்து
மஹிஷாஷுரமர்த்தனி என்றப்போ
மஹாதேவியும் தானழைத்தாள் 39

மகிஷாஸுரனை ஸம்ஹரித்த எங்கள்
மஹாதேவியே நமஸ்காரம்
மனஸ்தாபம் போக்கிநாடுகள் தந்த
மஹேஸ்வரியே நமஸ்காரம் 40

அண்டத்திற்கெல்லாம் அதிபதியே
ஜகதாம்பிகையே நமஸ்காரம்
அபயமென்றோரை ரக்ஷித்திடும்
அம்மா உனக்கு நமஸ்காரம் 41

பிரணவமயமான பார்வதியே
பரதேவதையே நமஸ்காரம்
சுத்த்ஸ்வரூப சுந்தரியே சிவ
காமவல்லியே நமஸ்காரம் 42

ஞானஸ்வரூபியே கல்யாணியே
ஸ்ரீமந்நாராயணியே நமஸ்காரம்
சாந்த ரூபசரீரணியே சிவ
சங்கரியே நமஸ்காரம் (என்று) 43

தேவரெல்லாரும் ஸ்துதிக்கவுமே
(மஹா) தேவியுங்கேட்டதி சந்தோஷமாய்
வேணவரங்களைக் கேளும்தாரோமென்று
வேதநாயகி சொல்லவுமே 44

ஆபத்துக்களொன்றும் வாராமலே எங்கள்
அம்மா வந்து நீ ரக்ஷிக்கவேணும்
ஆகட்டுமென்று விடையளித்து ஜக
தம்மனும் அந்தர்த்தான மடைந்தாள் 45

## சும்பன் நிசும்பன் விருத்தாந்தம்

அதற்குப்பின் சிலகாலத்தினில் பொல்லா
அஸுரர் இரண்டுபேர் உண்டானார்
அந்த அஸுரரை சம்ஹரித்த ஜக
தம்பிகையின் மகிமை சொல்லுவேன் 46

சும்பன் நிசும்பன் என்றிரண்டு பொல்லா
சூரர்களப்போ உண்டானார்கள்
பால்யவயதில் தபசுபண்ணி அவர்
வரங்கள் வேணதெல்லாமடைந்தார் 47

இந்திரனுடனே தேவர்கள் பிரம்மனை
எல்லாரையுமடித்துத் துரத்தி
சமஸ்தலோகம் நடுங்கிடச்செய்து
சங்கையில்லாமலே ஆண்டிருந்தார் 48

நடுங்கிப் போயந்தத் தேவர்களெல்லாம்
நமக்குப் பொல்லாத காலமென்று
வெவ்வேறு ரூப மெடுத்துக்கொண்டு தேவாள்
பூலோகத்தில் வந்து சஞ்சரித்தார் 49

நாற்பத்தொரு சதுர்யுகமாய்த் தேவர்
ராஜ்ஜியந்தன்னை யிழந்திருந்தார்
விமோசன மொன்றையும் காணுமே என்று
விஷ்ணு உலகத்திற் கோடிவந்தாள் 50

நடுங்கிவந்தீர்கள் தேவர்களே இப்போ
நம்மாலிதற்கொன்று மாகாது
விஷ்ணுமூர்த்தியும் தேவரும் இந்திரனும்
விரிஞ்சமூர்த்தியுங் கூடிக்கொண்டு 51

மஹாமேரு பர்வதச்சாரலிலே
வந்து பிரம்மாதி தேவரெல்லாம்
இதற்கு நாமென்ன செய்யப் போமுமென்று
ஏக்கமடைந்தார் அமராளெல்லாம் 52

புத்தியுள்ள ஒருதேவனப்போ எண்ணி
பூர்வத்தில் தேவியும் சொன்னுரே
இடுக்கண் வந்திட்ட வேளையினில்
என்னை ஸ்துதியுங்கள் என்றுரே 53

ஆமாம் அதுவும் உள்ளதென் றெண்ணியே
அமரா ளெல்லாரும் கூடிக்கொண்டு
நமஸ்தே நமஸ்தே என்று சொல்லியப்போ
ராஜேஸ்வரியை ஸ்தோத்தரித்தார் 54

மூலா தாரி சரஸ்வதியே ஜகந்
மோஹினியே நமஸ்காரம்
மாயாதாரியே லக்ஷ்மியே
மஹேஸ்வரியே நமஸ்காரம் 55

பகவான் தேகத்தில் பாதியன்றோ எங்கள்
பார்வதியே நமஸ்காரம்
எங்களை ரக்ஷிக்க வேண்டுமிப்போ ஜக
தீஸ்வரியே நமஸ்காரம் என்று 56

தேவரெல்லோருமாய் ஸ்தோத்தரிக்க
தேவியும் பிரத்யக்ஷமாக வந்து
அஞ்சாதேயுங்கள் நீங்களென்று
(அப) யஸ்தங்கொடுத்தாள் தேவருக்கு 57

ஹிமயபர்வதந் தன்னில்வந்து தேவி
கன்னிகாரூப மெடுத்துக்கொண்டு
கோகிலம் போலும் குரலுடையாள்
கொம்புத்தேன் போலும் மொழியுடையாள் 58

ஹம்ஸம்போலும் நடையுடையாள்
அபயங்கொடுக்கும் கரமுடையாள்
மன்மதன் கைகொண்ட விற்போலுமுள்ள
வளைந்த புருவச் சிலையழகும் 59

முத்துகோத்தாப்போல் பல்லொளியும்
பவழம் போன்ற அதரங்களும்
பட்டமுஞ்சுட்டியும் நெற்றிதனில் மின்ன
பதக்கம் சரப்பளி மார்பிலசைய 60

தண்டைசிலம்பு கல கலென்னக்காலில்
சிலம்பு கொஞ்சிச் சலுஞ்சலென்க
சொர்ணமயமான ஊஞ்சலில் இருந்து
கோடிஷூர்யர் உதித்ததுபோல் 61

தங்கத்தினலான சங்கிலியைத் தொட்டு
தானேபாடிக்கொண்டு ஆடலுற்றாள்
சண்டமுண்டரென்ற இரண்டசுரர்களும்
(தேவி) கானந்தனைக்கேட்டு ஓடி வந்து 62

தேவியுடைய அருகினில் வந்தாள்
சேதியொன்று எடுத்துரைப்பாள்
எங்கள் ராஜாவின் ப்ரதாபங்கள் தன்னை
இத்தனை நாளிலுங் கேட்டில்லையோ 63

சும்பன் நிசும்பன் என்றிரண்டு பேர்களா
மூன்று உலகமும் ஆண்டிருக்காள்
உமக்கு மெத்த அழகிருந்து மிப்போ
போக பாக்கியம் புஜியாமல் 64

அதிசயமான ரூபத்துடன் நீரும்
தனித்திருக்கின்ற காரியமேன்
எங்கள் ராஜனுக்கே ஏர்வையம்மா நீர்
இந்தக்ஷணத்தில் வாருமம்மா 65

வாருமென்றஸுரன் சொல்லலுமே
மஹேஸ்வரியும் எடுத்துரைப்பாள்
ஸ்த்ரீபுத்திக்கு ஸ்திரமில்லையே நான்
தெரியாமலே ஒன்று செய்து விட்டேன் 66

பிரிதிக்ஞை ஒன்று செய்து கொண்டேன்
என்பர்த்தாவாய் வரவேணு மென்றால்
யுத்தம் பண்ணியே என்னை ஜயித்தவர்
எனக்கிஷ்டமாகிய பர்த்தாவென்று 67

உங்கள்ராஜர்க்குச் சொல்லுங்களென்றம்மன்
உத்தரஞ் சொல்லி அனுப்பிவைத்தாள்
சண்டமுண்டரும் ஓடிவந்தாரந்தச்
சும்ப நிசும்பர் அண்டையினில் 68

உச்சிதமாகின்ற ரத்தினங்கள்
உங்களிடத்தில் இருந்தாலும்
சேர்க்கவேண்டிய இரத்தினங்களில்
ஸ்திரீ ரத்தினம் உங்களுக்கியில்லையே 69

ஏற்றமான தோர் கன்னிகாரத்தினம்
ஹிமய பருவதத்திலிருக்காள்
சகாயமாகப் புருஷர்களுமில்லை
தனித்திருக்காள் சதியுடனே 70

சண்டமுண்டரும் சொல்லலுமே
சும்பாஸுரன் கேட்டுச் சந்தோஷமாய்
சும்பன் மகிழ்ந்து தன் மந்திரியான
சுக்ரீவன் தன்னைகிட்டழைத்து 71

என் மகிமைகளை அவளுக்குரைத்து (நல்ல)
இஷ்டமாகிய வார்த்தை சொல்லி
வார்த்தை சொல்லி வசமாக்கிக் கொண்டு
வாருமென்று அனுப்பிவைத்தான் 72

சுக்ரீவன் கேட்டு சந்தோஷமாய் வெகு
சீக்கிரமாகவே ஓடிவந்தான்

தேவியருகினில் கிட்டவந்து மெள்ளச்
சேதியை நன்ருய் எடுத்துரைப்பான் 73
எங்கள் ராஜாவின் சேதி ப்ரதாபங்கள்
வந்தவர்களிங்கே சொல்லலையோ
சும்பநிசும்பனென்று இரண்டுபேர்
மூன்றுலகங்கட்டி யாண்டிருக்காள் 74
உமக்கு மெத்த அழகிருந்தும் நல்ல
போக பாக்கியம் புஜியாமல்
(இந்த) அதிருப சவுந்தரியத்துடன்
தனித்திருக்கின்ற காரியமேன் 75
எங்களிராஜற்கு ஏர்வையம்மா நீர்
இந்த க்ஷணத்தில் வாருமென்ருன்
வாருமென்று அழைக்கலுமேயவள்
மாஹேஸ்வரியு மேது சொல்வாள் 76
சபதமொன்றல்லோ செய்திருக்கேன்
சத்தியமாகவே சொலலுகிறேன்
சண்டையிட்டு என்னை ஜயித்தவர்கள்
கொண்டுபோகலாமென்று சொல்லி 77
உங்களிராஜர்க்கு சொல்லுங்ளென்று
உத்தரஞ்சொல்லி யனுப்பிவைத்தாள்
சுக்ரீவன் கேட்டுக் கோபத்துடன்
சும்பாஸுரன் கிட்டவந்து சொன்ஞன் 78
சும்பாஸுரன் கேட்டுக் கோபத்துடன்
தும்ப்ரக்லோசனைக் கிட்டழைத்து
நயபயமாய் அவனுக்குச் சொல்லி
நம்ம மகிமை எடுத்துரைத்து 79
(இந்தச்) சேதியொன்றையுங் கேட்காவிட்டால்
சிட்சை பண்ணிக்கொண்டு வாருமென்ருன்
தூம்பரலோசனன் கேட்டுச் சந்தோஷமாய்
துரிதமுடன தேவிகிட்டவந்து 80
ஏனம்மா இந்த அக்ரமம் உனக்கு
எங்கள் ராஜனிடத்திலே
சேராதே போனல் உம்மையிப்போ நான்
சிட்சை பண்ணுவேனென்று சொல்லி 81
அதட்டியே சில வார்த்தை சொல்லியவன்
இழுக்க வந்திட்டான் அம்மனையும்
பார்த்து அம்மனும் ஹுங்காரம் பண்ணவே
பஸ்மமாக எரிந்து போஞன் 82
தூம்ப்ரலோசனன் பட்டுப் போனனென்று
தூதர்கள் ஓடிச்சொன்ஞருடனே

மந்திரியும் பட்டுப்போனான் என்றவுடன்
மண்டியெரிந்து கண்கள் சிவந்து 83
சண்டமுண்டரைக் கிட்டழைத்து நீங்கள்
சம்ஹரித்திங்கே வாருமென்றான்
சண்டமுண்டரும் ஓடிவந்து அந்தச்
சங்கரி தேவியை வந்தெதிர்த்தார் 84

கண்டு தேவி தன் கோபத்தீயாலே
காளிதேவியை உண்டாக்கினாள் (அவள்)
சண்டமுண்டர் தலையை வெட்டிச்சிவ
சங்கரி தேவிமுன் வந்து நின்றாள் 85

சங்கரியம்மனும் சந்தோஷமாயப்போ
சாமுண்டி என்ற பேர் தான் கொடுத்தாள்
தேவர்கள் எல்லாரும் கூடிக்கொண்டு மஹா
தேவிக்கு புஷ்பமலர் சொரியுங்கள் 86

சண்டமுண்டரும் பட்டாரென்று கேட்டு
சர்ப்பம்போலே யவன் சீறிக்கொண்டு
தனக்குண்டானதோர் சேனைக்கெல்லாமப்போ
அரைக்ஷணத்தில் ஆணையிட்டான் 87

என்பத்து நாலாயிரம் சேனைகளும்
இமைப்பொழுதினிற் கூட்டிவைத்தான்
அதிபலவானான இரத்த பீஜன்றன்னை
அம்பிகை முன்னால் அனுப்பிவைத்தான் 88

சகலதேவர்கள் அம்சங்களுஞ்சேர்ந்து
ஸப்தமாதர்கள் உண்டானாள்
நாராயணி நரசிம்ஹி என்றும்
வைஷ்ணவி மஹாதேவி என்றும் 89

பிரஹ்மாணி கௌமாரி என்றும்
காளி சாமுண்டி தேவி என்றும்
ஈஸ்வரியுடைய தோழிகளாகவே
ஏழுபெண்டுகள் கூடிக்கொண்டு 90

ரத்தபீஜனுடன் யுத்தம் பண்ணும்போது
ரத்தங்கீழே விழுந்தப்போ
பிந்துவுக்குப்பிந்து இரத்தபீஜனாக
பூமியெங்கும் முளைக்கலானான் 91

அம்பிகையுடைய அனுக்ஞையினால் மஹா
அட்டகாசத்துடன் காளிதேவி
இரத்தபீஜனை சம்ஹரித்து அவன்
இரத்தமெல்லாம் உறிஞ்சிவிட்டாள் 92

காளிகா தேவியும் இரத்த பீஜர்களை
வாரி வாரி விழுங்கிவிட்டாள்
இரத்தபீஜனும் பட்டவுடன் பொல்லா
நிசும்பனும் பார்த்துக் கோபத்துடன் 93
ஸம்ஹரிப்பேன் இவளையென்று சொல்லி
சபதம் செய்து தமயன் முன்னே
தேவியுடனே எதிர்த்து நிசும்பனும்
தோற்காமலே யுத்தம் செய்து நின்றான் 94
ஆயிரமாயிரம் அம்பு கொடுத்தவன
அஞ்சாமலேயுத்தம் பண்ணலுற்றான்
நேரேயுத்தம்பண்ணி லீலாவினோதமாய்
நிசும்பனைக் கொன்றாள் ஸ்ரீதேவியும் 95
தம்பியும் பட்டதைக் கேட்டுச் சம்பாஸுரன்
சங்கையில்லாத கோபத்துடன்
அம்பிகையெதிரில் வந்து சும்பாசுரன்
ஆங்காரத்துடன் ஏது சொல்வன் 96
யுத்தம் பண்ணத் தெரிந்தவளோ எங்கள்
இத்தனைபேரையும் ஏய்த்தாயடி.
யாருமில்லாதே யிருந்தாயேடி நீயும்
ஏழுபேருடனிப்போ நின்றாயடி 97
(என்) அளவில்லாத சேனைகளுக்கெல்லாம்
அனலாக வந்து நின்றாயடி
(என் சங்கையில்லாத சேனைகளுக்கெல்லாம்
சதிகாரியாக நீ வந்தாயடி 98
சதிகாரியடி நீயுமிப்போ என்னை
சற்பனை செய்யவே வந்தாயடி.
வஞ்சித்தாயடி நீயுமென்னை யிப்போ
வார்த்தைகள் இரண்டு சொன்னாயடி 99
ஒருத்தியாக இருந்து கொண்டன்றோ நீ
உத்தரஞ்சொல்லி யனுப்பிவைத்தாய்
அத்தனைபேர்களைச் சேர்த்துக்கொண்டு இப்போ
அமட்டுகிறாயடி நீயுமென்னை 100
(உன்) அழகான உருவத்தைக் கண்டபின்
அமர் புரியவென் கையெழுமோ
துரத்தி எல்லோரையும் காளியை என்னுடன்
தொந்தயுத்தம் பண்ணச்சொல்வாயென்றான் 101
சும்பன் வார்த்தையைக் கேட்டுச் சகிகளை
இங்கே வாருங்கள் என்றழைத்து
வாரியணைத்தாள் சகிகள் எல்லோரையும்
மாரோடு மறைந்து ஐக்கியமானாள் 102
இரண்டாம் பேரிங்கில்லை காளியுடன் நீ
எதிர்த்து யுத்தமும் பண்ணுயென்றாள்

அம்மன் செயலேயும் வார்த்தையையும் கேட்டு
அம்புபட்டாப் போலுந் தானுருகி 103
சும்பாஸுரனும் காளிகா தேவியும்
தோர்க்காமலே யுத்தம் பண்ணலுற்ருர்
அடித்தபந்து கிளம்பினுற்போலவன்
ஆகாயத்திலிலே கிளம்பி 104
ஒருவருக்கொருவர் சளேயாமல் அங்கு
ஓடோடியுத்தமும் பண்ணிஞர்கள்
சும்பாஸுரனும் காளிகாதேவியும்
தொந்தயுத்தமும் பண்ணிஞர்கள் 105
தேவர்களெல்லாம் பயத்துடனே மஹா
தேவியைஸ்துதித்துக் கொண்டிருந்தாள்
எத்தனைபோதாகயுத்தம் பண்ணுவோம்
என்று காளியும் கோபத்துடன் 106
சும்பாசுரனை வதைத்தாள் காளியும்
துர்காதேவியென்றம்மனை அழைத்தாள்
துர்காதேவியம்மன் அஸுரனை வதைக்க
தேவர்கள் புஷ்பமழை சொரிந்தாள் 107
அத்தனை தேவர்களும் கூடிஜக
தம்பிகைதன்னை ஸ்துதிக்கலாஞர்
சும்பநிசும்பரை ஸம்ஹரித்த எங்கள்
துர்கா்தேவி நமஸ்காரம் 108
துக்கம்போக்கியே நாடுதந்த எங்கள்
தேவியுமக்கு நமஸ்காரம்
சண்டமுண்டனை ஸம்ஹரித்த எங்கள்
துர்க்காதேவி நமஸ்காரம் 109
ரத்தபீஜனை ஸம்ஹரித்த எங்கள்
பத்திரகாளி நமஸ்காரம் (என்று)
பக்தியாய் தேவர்பணிந்து ஸ்துதித்திடப்
(பரதேவியும்) பார்த்துச் சந்தோஷமானுள் 110

## தேவியைப் பூஜித்து ஸதுதித்தவர்கள் அடையும் பலனை விவரித்தல்

ஆபத்துக்கள் ஒன்றும் வாராது
அன்புடனிதைப் படித்தவர்க்கு
பேய்ப்பிசாசுகள் அண்டாதவர்களும்
புத்திரசோகம் அனுபவியார் 111
தரித்திரங்கள் அனுபவியார்
தீர்க்காயுசும் நான் கொடுப்பேன்
புத்திரசம்பத்தும் நான் கொடுப்பேன்
பரதேவதை பக்தியைச் செய்தபேர்க்கு 112

விப்ரர்களிதைக் கேட்டு விட்டால்
வேதசாஸ்திரம் விருத்தியாகும்
க்ஷத்திரியர்களிதைக் கேட்டுவிட்டால்
ஜயத்துடனே அரசாள்வார் 113
வைசியர் களிதைக்கேட்டு விட்டால்
வியாபாரத்தில் வெகுலாபமுண்டாம்
சூத்திரர்களிதைக்கேட்டு விட்டால் நல்ல
ஜயமடைவாள் கிருஷித்தொழிலில் 114
ஸ்திரீகள் பக்தியுடனே படித்தாலிதை
தீர்க்க சுமங்கலியா யிருப்பாள்
கன்னிப்பெண்களிதைப் படித்தால் நல்ல
கணவர் தன்னை யடைந்திடுவாள் 115
நவராத்திரியில் தவருமல் பூஜித்தால்
ராஜேஸ்வரியின் கிருபையடைவார்
பஞ்சபர்வங்களில் பக்தியாய் பூஜித்தால்
பரதேவியின் பதமடைவார் 116
நித்தியமாக ஸ்துதித்தவர்களுக்கு
நினைத்த வரமும் நான் கொடுப்பேன்
வெள்ளி செவ்வாயில் ஸ்துதித்தவர்களுக்கு
வேண்டும் வரங்கள் கொடுத்திடுவேன் 117
மனதிலுள்ள அபீஷ்டங்களெல்லாம்
வருந்தும் உங்கட்கு தருவோமென்ருள்
தருவேனென்றம்மன் சொல்லவுமே அந்த
தேவர்களெல்லாம் மனமகிழ்ந்து 118
ஒருக்காலும் ஆபத்து வந்திடாமல்
உகந்துரக்ஷிக்க வேணுமம்மா
உகந்து ரக்ஷிக்க வேணுமென்றவுடன்
உலக நாயகி ஏது சொல்லுவாள் 119
அநேககாலங் கழிந்தவுடன் பொல்லா
அசுரர் மிகவும் உபத்திரவிப்பாள்
நந்தகோபர் அரண்மனை தன்னில்
கண்ணனாய் பிறந்து ரக்ஷிக்கிறேன் 120
பாரத மாதாவாய் ராஜ்ஜியங்களெல்லாம்
பரிபாலித்து நான் ரக்ஷிக்கிறேன்
ஆறுதல் சொல்லியே தேவர் எல்லோருக்கும்
அம்பிகை அர்த்தான மடைந்தாள். 121

## சுரதனென்ற ராஜனும் சாமதி என்ற கோமுட்டியும் தேவியைப் பூஜித்துப் பலனடைதல்

வைசியனும் மகாராஜாவும் தேவியின்
மகிமை கேட்டு மனமகிழ்ந்து

தவமுனிவர் அனுக்ஞையினால் ஜகத்
தம்மனை நோக்கித் தபசுசெய்ய 122

சையபருவதம் சாரலிலே வந்தார்
சாமதியுடனே இராஜனப்போ
இந்திரியங்களுடன் வாயுவையும்
எல்லாவற்றையும் உள்ளடக்கி 123

அம்மனை நோக்கி இருவருமாய்
அநேககாலம் தவமிருந்தாள்
தபஸைக்கண்டதி சந்தோஷமாய்
சங்கரியுமவாள் முன்னே வந்தாள் 124.

என்ன வரம்வேணுமென்று அரசனை
ஈஸ்வரி தேவியுங் கேட்கலுமே
என்னுடையதோர் நாடுராஜ்ஜியங்களும்
எப்போதும்போலவே வேணுமென்றார் 125

ராஜ்ஜியத்தை யடைவாயென்றம்மன்
ராஜாவைப்பார்த்து எடுத்துரைப்பாள்
அறுபதினாயிரம் ராஜ்ஜியத்தையாண்டு
அவதரிப்பாய் மநுவாக 126

ராஜாவைப்பார்த்து வரங்கொடுத்து அம்மன்
சாமதியைப் பார்த்துக் கேளு மென்றாள்
(உங்கள்) ஐக்கியம் ஒன்றுமே போதுமம்மா
உம்முடைய கிருபை வேணுமம்மா 127

அப்படியே உந்தன் சித்தம் துலங்கியே
ஆத்மக்கியானம் அடைந்திடுவாய்
ஜீவன் முக்தியடைந்திடுவாயென்று
தேவியும் அர்த்தான மடைந்தாள் 128

ராஜனும் தேவிகிருபையடைந்து தன்
ராஜ்ஜியமடைந்து ஆண்டிருந்தான்
சுமேதஸ்முனியின் ஆசிரமத்தில்
சாமதியும் ஞான வானாயிருந்தான் 129

தேவி பாகவதை புராணத்திலுள்ள
சிறந்த ஐந்தாம் ஸ்கந்தமிதை
துஷ்ட அஷுரரை சம்ஹரித்த இந்த
தேவி மகிமை படித்தவர்கள் 130

அன்புடன் தேவி மகிமைதன்னைச் சொல்லி
அநுதினமும் ஸ்துதித்தவர்கள்
அம்பிகை பாதாரவிந்தத்திலேயவர்
ஐக்கியப் பதமடைந்திடுவாள் 131

## மங்களம்

ஹாரத்தி—எத்தி வாரிஜமுகி சீதாதேபுக்கு
என்ற மெட்டில் பாடலாம்.

1 மங்களம் ஜயமங்களம் ஜயமஹாதேவிக்கு
மங்களம் லலிதாதேவியுடன் மஹாகாளிக்கு

2 சங்கு சக்கரம் கையில் தரித்த சக்ரநாதைக்கு
சங்கையில்லாத அஸுரானைக் கொன்ற-சாமுண்டி
தேவிக்கு

3 துஷ்ட அஸுரானை ஜயித்த துர்க்காதேவிக்கு
சிஷ்டர்களான தேவரைக் காத்த ரத்தாம்பாளுக்கு

4 இஷ்டதெய்வமாம் எங்களை ரக்ஷிக்கும் எமஸ்வரூபிக்கு
கஷ்டம் நீக்கிக் கருணைபொழியும் காமாக்ஷிதேவிக்கு

5 அஷ்டபோகபாக்கியமளிக்கும் ஆதிசத்திக்கு
துஷ்ட பண்டாஸுரனை வதைத்த ஸ்ரீலலிதைக்கு

6 சசலதேவ ஸ்வரூபியான சக்தி கௌரிக்கு
அகிலலோகத்தை பரிபாலித்திடும் அம்பா தேவிக்கு

7 வாழ்க தேவி நாமம் வாழ்க மறைகள் வாழ்கவே
வாழ்க மானிடர் வாழ்க ஆவினம் வளமையாகவே

8 பக்தருக்கருள் பொழியும் ஸ்ரீ—பரதேவி வாழ்கவே
அத்யந்த பக்தியுடனே படிக்கும் அன்பர் வாழ்கவே

ஓம் சுபம்

தத்-ஸத்-பிரம்மார்ப்பிதம்

முற்றிற்று.

வடக்கன்குளம் கலைமகள் பிரஸில் அச்சிடப்பெற்றது.